GCI

# பாடம் – 8

## ஆவிக்குரிய வரங்கள்

**முகவுரை**

**பாடத்தின் நோக்கம்**

- பலவிதமான வரங்கள் மற்றும் ஊழியங்களைப் புரிந்து கொள்ள,
- நமக்கு அளிக்கப்பட்ட வரங்களின் நோக்கம் அறிய
- உங்கள் சொந்த வரங்களை அறிய உதவி

**பாடத்திட்ட வரையறை**

I. முகவுரை

A. கர்த்தருக்கு ஊழியம் செய்வது ஒரு சிலாக்கியம்

B. நமது வரங்களின் நோக்கம்

C. நமது வரங்களின் எதிர்பார்ப்புகள்

D. மனிதத் திறமைகளுக்கும் ஆவிக்குரிய வரங்களுக்கும் இடையே உள்ள வித்தியாசங்கள் யாவை?

E. ஆவிக்குரிய கனிக்கும், வரங்களுக்கும் இடையே உள்ள வித்தியாசங்கள் யாவை?

II. வித்தியாசமான வரங்கள் மற்றும் ஊழியங்கள்

A. மூன்று முக்கிய விதமான வரங்கள் மற்றும் ஊழியங்கள்

GCI

B. சேவை வரங்கள், வெளிப்பாடு மற்றும் தலைமைத்துவத்தின் பொதுவான சுருக்க வர்ணனை

III. வெளிப்படையான வரங்கள் பற்றிய ஒரு பாடம் I கொரிந்தியர் 12:8-10

வரங்கள் விளக்கம்

IV. செயல்பாட்டு வரங்கள்

A. தீர்க்கதரிசன வரம்

B. சேவையின் வரம்

C. போதனை வரம்

D. எச்சரிக்கும் வரம்

E. கொடுக்கும் வரம்

F. நிர்வாக வரம்

G. இரக்கஞ் செய்யும் வரம்

V. முடிவுரை

A. நமது ஆவிக்குரிய வரங்கள்/ ஊழியங்களை அறிந்து கொள்ள உதவும திறவு கோல்கள்

B. நமது ஆவிக்குரிய வரங்கள்/ ஊழியங்களை வளர்க்க உதவும் திறவுகோல்கள்

GCI

# I. முகவுரை

## A. கர்த்தருக்கு ஊழியம் செய்வது ஒரு சிலாக்கியம்

உங்கள் வரங்களைக் கண்டறிவதன் முக்கியத்துவம்: மத்தேயு 25:14-30

இந்த உவமையில் இருந்து நாம் சில பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம்:

1. தேவன் வரங்கள் அல்லது தாலந்துகளைத் தருபவர்

எபேசியர் 4:11 "ஏற்படுத்தினார்"

2. எல்லா விசுவாசிகளுக்கும் வரம்/வரங்கள் கொடுக்கப்படுகிறது.

மத்தேயு 25:15

| | |
|---|---|
| ஒருவனுக்கு | 5 தாலந்துகள் |
| வேறொருவனுக்கு | 2 தாலந்துகள் |
| மற்றொருவனுக்கு | 1 தாலந்து |

ரோமர் 12:6 நம்மில் அவனவனுக்கு அளிக்கப்பட்ட கிருபையின்படியே பற்பல வரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

3. தேவன் தமது மக்களிடம் கணக்கொப்புவிக்கும் தன்மையை எதிர்பார்க்கிறார்

மத்தேயு 25:19 வெகுகாலமானபோது அந்த ஊழியக்காரருடைய எஜமானன் திரும்ப வந்து, அவர்களிடத்தில் கணக்குக் கேட்டான்.

4. பலன்தராத ஊழியனைக் குறித்த சில சத்தியங்கள்.

a) தேவனைக் குறித்து தவறான அபிப்பிராயம் கொண்டிருந்தான்

மத்தேயு 25:24 "... கடினமான எஜமானன்"

ஓசியா 4:6

"என் ஜனங்கள் அறியாமையால் கெட்டுப் போகிறார்கள்"

b) பயமுள்ளவனாய் இருந்தான்

மத்தேயு 25:25 "நான் பயந்து.."

தமது இலக்குகளையும், திட்டங்களையும் அடையவிடாதபடி பயமானது அநேகரைத் தடுத்துப் போடுகிறது.

2 தீமோத்தேயு 1:7 "தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்."

c) அவன் ஒரு சோம்பேறியாய் இருந்தான்

மத்தேயு 25:26 "அவனது எஜமான் பிரதியுத்திரமாக: பொல்லாதவனும் சோம்பலுமான ஊழியக்காரனே..."

d) தேவன் பிரதிபலன் தருகிறவர்

மத்தேயு 25:21,23 "நல்லது, உண்மையும் உத்தமுமான ஊழியக்காரனே! நீ கொஞ்சத்தில் உண்மையாய் இருந்தாய். உன் எஜமானுடைய சந்தோஷத்தில் பிரவேசி"

## B. நமது வரங்களின் நோக்கம்

2 கொரிந்தியர் 3:4-6 எபேசியர் 4:12,13 1 பேதுரு 4:10

அப்போஸ்தலர் 8:19-23ல் சீமோன் என்னும் மந்திரவாதி பேதுரு மற்றும் யோவான் ஆகியோரிடமிருந்து வெளிப்பட்ட அபிஷேகத்தைக் கண்டான். அவனும் அவ்வாறே மற்ற மக்கள் தலைகளில் கை வைக்கும்படி அந்த அபிஷேகத்தை விரும்பினான். வேதம் சொல்லுகிறது, அவனது நோக்கம் சரியானதாய் இருக்கவில்லை.

1. ஜீவன் கொடுக்க 2 கொரிந்தியர் 3:4-6

GCI

வசனம் 6 சொல்லுகிறது "அவரே எங்களை தகுதியுள்ளவர்களாக்கினார்." அவர் எங்களைத் தகுதிப்படுத்துவார் என்று சொல்லாமல் ஏற்கனவே தகுதி உடையவர்களாய் உருவாக்கினார் என்று சொல்லுகிறது. புதிய உடன்படிக்கையின் ஊழியர்களாய் – ஜீவனைத் தரும் ஆவியின் உடன் படிக்கை.

2. தேவ மக்களைப் பக்திவிருத்தி அடையச் செய்ய எபேசியர் 4:12

எபேசியர் 4:11–12 வரங்கள் கையளிக்கப்படுவதின் நோக்கம் ஊழியத்தின் வேலைக்காக தேவ ஜனத்தை ஆயத்தப்படுத்துவதற்காக!

a) ஒற்றுமையின் உபகரணமாய்த் திகழ வசனம் 13

b) தேவ ஜனம் முதிர்ச்சி அடைய உதவி வசனம் 13

3. பிறருக்கு சேவை செய்ய I பேதுரு 4:10

"அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல, ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்."

இங்கே சொல்லப்பட்டுள்ள வரங்களைப் பெற்றுக் கொண்டுள்ளோம். இதற்காக நாம் பிரயாசப்படவோ, சம்பாதிக்கும்படி பாடுபடவோ செய்யவில்லை. ஆகவே இந்தக் கையளிப்பின் நோக்கம் பிறருக்குச் சேவை செய்வதில் வெளிப்பட வேண்டும் என்பதே:

## C. நமது வரங்களின் எதிர்பார்ப்புகள்

1. ரோமர் 12:1 நமது சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க

I பேதுரு1:15–16 உங்களை அழைத்தவர் பரிசுத்தராய் இருக்கிறபடியால்

GCI

நீங்கள் செய்யும் காரியத்திலும் பரிசுத்தமாய் இருங்கள்.
நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்
என்று எழுதப்பட்டிருக்கிறதே.

2. ரோமர் 12:2 உலகத்திற்கேற்ப, உலக வழிகளில் சாராதிருக்க

I யோவான் 2:15–16 மாம்ச இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை

3. அன்பின் வழியில் நடக்க

I கொரிந்தியர் 14:1 அன்பை நாடுங்கள். ஞான வரங்களை விரும்புங்கள். விசேஷமாகத் தீர்க்கதரிசன வரங்களை நாடுங்கள்

நமது வரங்கள் தலைமைத்துவம் சார்ந்தவையானாலும் அல்லது போதனை, நிர்வாகம் வாக்கு அல்லது சுகமளிப்பது போன்ற வரங்களானாலும் நாம் அன்பின் வழியில் நடக்க வேண்டும்.

## D. மனிதத் திறமைகளுக்கும் ஆவிக்குரிய வரங்களுக்கும் இடையே உள்ள வித்தியாசங்கள் யாவை?

| | தாலந்துகள் | வரங்கள் |
|---|---|---|
| 1. | முற்பிதாக்களிடமிருந்து பெறப்பட்டவை | ஆவியால் அருளப்பட்டவை |
| 2. | இயல்பாகவே பிறப்பிலிருந்தே காணப்படுகின்றன | புதிய பிறப்பில் இருந்து காணப்படுகிறது |
| 3. | மனித வர்க்கமனைத்துக்கும் இறைவனால் கொடுக்கப்பட்டவை | கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர் அனைவருக்கும் அருளப்பட்டவை |
| 4. | மனித செயல்பாடுகளுக்காக | சரீரத்தின் ஊழியத்துக்காக |
| 5. | ஆவியின் சார்பின்றி செயல்படுவன | ஆவியானவரைச் சார்ந்தவை |
| 6. | இயல்பான வகையில் செயல்படுகின்றன | ஆவிக்குரிய வகையில் செயல்படுகின்றன |

GCI

| | | |
|---|---|---|
| 7. | விளைவுகள் தற்காலிகமானவை | விளைவுகள் நித்தியமானவை |
| 8. | சுயத்தை மகிமைப்படுத்துகிறது | தேவனுக்கு மகிமை செலுத்துகிறது |

ஆவிக்குரிய வரங்களுக்கும், கனிக்கும் இடையே உள்ள வித்தியாசங்கள் யாவை?

கலாத்தியர் 5 I கொரிந்தியர் I2 ரோமர் I2 எபேசியர் 4

| | கனிகள் | வரங்கள் |
|---|---|---|
| I. | கிறிஸ்தவனை அடையாளங் காட்டுகிறது | கிறிஸ்தவனின் செயல்களைத் தீர்மானிக்கிறது |
| 2. | எல்லாக் கிறிஸ்தவனிலும் ஒரே வகையில் காணப்படும் | ஒவ்வொரு கிறிஸ்தவனிலும் வித்தியாசம் உள்ளவை |
| 3. | சாத்தானால் செயல்படுத்த முடியாதவை | சாத்தானால் செயல்படுத்த இயலும் |
| 4. | குணாதிசயத்துடன் செயல்படுகிறது | ஊழியம்/சேவை மையப்பட்டது |
| 5. | தன்னில் தான் இறுதியானது | முடிவுக்கு எடுத்துச் செல்லும் வழி |
| 6. | நிரந்தரம்/நித்தியமானது | ஒழிந்து போகக்கூடியவை |
| 7. | ஆவிக்குரிய, மற்றும் முதிர்ச்சியின் அடிப்படையிலானது | ஆவிக்குரிய தன்மையின் அடிப்படையில் வருவன அல்ல |

## II. வித்தியாசமான வரங்கள் மற்றும் ஊழியங்கள்

### A. மூன்று முக்கிய விதமான வரங்கள் மற்றும் ஊழியங்கள்

தேவன் நமது கிறிஸ்தவ சேவை நம் குடும்பத்திலிருந்து சுதந்தரித்துக் கொண்ட திறமைகளையோ அல்லது பள்ளியில் கற்றுக் கொண்டவைகளையோ வைத்து மட்டும் செய்யப்படும் நிலைக்குத் தள்ளப்படவில்லை. தேவன் தமது கிருபையால் விசுவாசிகளுக்கு "ஆவிக்குரிய வரங்கள்" என்னும் விசேஷத் திறமைகளைக் கையளிக்கிறார். கிறிஸ்தவ ஊழியத்திற்கு உதவும் மூன்று வித வரங்களை வேதம் நமக்கு விளக்குகிறது.

- **எபேசியர் 4:7-16 இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் சபை பயிற்சி பெறுவதற்காகவும், உற்சாகப்படுத்துவதற்காகவும், ஊழியத்திற்குத் தேவையான வழிகளைப் பெற்றுக் கொள்ளவும் தேவையான தலைமைத்துவ வரங்களைக் குறித்து பவுல் அடையாளப்படுத்துகிறார்.**
- **ரோமர் 12:6-8 ஏழுவிதமான விசேஷித்த சேவை வரங்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனும் இவைகளில் ஒன்றையே அதற்கு அதிகமானவைகளையோ உடையவராய் இருக்கிறார்**
- **1 கொரிந்தியர் 12:8-10 ஆவியானவரில் வெளிப்படையான வரங்கள், இவைகளால் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட உதவி, வழி நடத்துதல் மற்றும் ஊக்கம் ஆகியவை கொடுக்கப்படுகின்றன.**

**இவைகள் மட்டுமன்றி, மேலும் பல வரங்களை வேதம் அறிவிக்கிறது. இந்த அதிகாரத்தில் 25 ஆவிக்குரிய வரங்களைக் காண்போம். ஒரு ஆவிக்குரிய வரங்களின் பரிசோதனையையும் இத்துடன் இணைத்துள்ளோம். இதன் மூலம் இதை வாசிப்பவர் தேவனால் கையளிக்கப்பட்ட வரங்களில் சிலவற்றை உடையவராய் இருக்கிறாரா என்பதை உறுதி செய்ய முடியும்.**

## B. சேவை வரங்கள், வெளிப்பாடு மற்றும் தலைமைத்துவத்தின் வரங்களின் சுருக்க வர்ணனை

**1. அப்போஸ்தலன் எபேசியர் 4:11**

**சிலசபைகளுக்குத் தலைமை தாங்கி செயல்பட தேவனால் கொடுக்கப்படும் திறமை. ஆவிக்குரிய காரியங்களில் மக்களை வழி நடத்துபவர்.**
**2 கொரிந்தியர் 12:12ல் அப்போஸ்தலன் அடையாளங்களையும்,**

GCI

அற்புதங்களையும் செய்கிறவர். சிலர் 12 அப்போஸ்தலருடைய காலத்துடன் முடிந்து போய்விட்டது என்று கருதுகின்றனர். எபேசியர் 4:11–13ல் ஐந்து வித ஊழியங்களும் விசுவாசத்தின் ஐக்கியத்திலும், தேவ அறிவிலும் வளர்ந்து தேர்ச்சி பெறவே சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. நாம் விசுவாசத்தின் ஒற்றுமையை எட்ட வேண்டும். இன்றைய சூழலில், அப்போஸ்தல ஊழியத்தை எதிர்பார்ப்பது சாத்தியமான ஒன்று தான்.

2. தீர்க்கதரிசி எபேசியர் 4:11

தேவனுடைய மனதை அறிந்து தேவனுக்காகப் பேசுகிற நபர். பரிசுத்த தி ஆவியின் வெளிப்பாட்டுடன் குறிப்பிட்ட சூழலின் கடந்த கால, நிகழ் கால மற்றும் எதிர் கால நிலைகளை அறிந்து கொள்ள முடியும். உதாரணமாக, தாவீதின் பாவத்தைத் தீர்க்கதரிசியான நாத்தான் அறிய முடிந்தது.
2 சாமுவேல் 12 அகபு தீர்கததரிசி பவுலுக்கு வரவிருந்த எதிர்காலத்தைக் குறித்த வெளிப்பாடு கொடுக்கப்பட்டிருந்தது.

அப்போஸ்தலர் 21:11

3. சுவிசேஷகன் எபேசியர் 4:11

அநேக ஆத்துமாக்களைக் கிறிஸ்துவண்டை கொண்டு வரும் திறன், பிலிப்பு சுவிசேஷகனென்று அழைக்கப்பட்டார். அப்போஸ்தலர் 8:5,6ல் பிலிப்பு சமாரியாவுக்குச் சென்று அற்புத அடையாளங்களுடன் தேவ வசனத்தைப் பிரசங்கித்தார். அதன் விளைவாக, அநேகர் சுகம் பெற்று, கர்த்தரிடத்தில் திரும்பினர்.

4. மேய்ப்பன் எபேசியர் 4:11

தேவ வசனங்களை மேய்த்து, போஷித்து, ஆலோசனை கொடுத்து கர்த்தருடைய வழியில் நடத்தும்படி கொடுக்கப்பட்ட திறன்.

5. போதகர் எபேசியர் 4:11

தேவ ஜனங்கள் புரிந்து கொண்டு வளரக்கூடிய விதத்தில் ஆண்டவருடைய சத்தியங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் திறன்.

6. ஞானத்தைப் போதிக்கும் வசனம் I கொரிந்தியர் 12:8

சபையின் பக்திவிருத்திக்காகக் குறிப்பிட்ட அறிவை நடைமுறைப்படுத்த பரிசுத்த ஆவியால்கொடுக்கப்பட்ட வெளிப்பாடு
உதாரணம்: பரிசேயரின் கேள்விகளுக்கு இயேசுவின் பதில். மத்தேயு 22:21

“ராயனுக்குரியதை ராயனுக்கும் தேவனுக்குரியதை தேவனுக்கும் கொடுங்கள்.”

7.அறிவை உணர்த்தும் வசனம் I கொரிந்தியர் 12:8

பரிசுத்தாவியினால் அருளப்படும் வெளிப்பாட்டின் மூலம் குறிப்பிட்ட சூழலின் கடந்த கால, நிகழ்கால உண்மைகளை அறியும் திறன். இவ்வாறு செய்வதால் அந்த நபர் அல்லது சபை பக்தி விருத்தி அடைய, திருத்தப்பட அல்லது ஆறுதலடைய ஏதுவுண்டாகிறது.

8. ஆவிகளைப் பகுத்தறிதல் I கொரிந்தியர் 12:10

குறிப்பிட்ட காரியம் மனித ஆவியால், பிசாசின் ஆவியால் அல்லது தேவ ஆவியால் உந்தப்பட்ட ஒன்றா எனப் பகுத்து உணரக்கூடிய விதத்தில் பரிசுத்தாவியால் அருளப்படும் ஞானம்
உதாரணம் : அப்போஸ்தலர் 16:16-18
குறிப்பு: 6-8 பொதுவான வெளிப்பாட்டு வரங்கள் என அழைக்கப்படுகின்றன.

GCI

9. அந்நியபாஷையின் வரம் I கொரிந்தியர் 12:10

தன்னால் முன் எபபோதும் அறியப்பட்டிராத மொழியைப் பேச தேவனால் கொடுக்கப்படும் திறன். சில வேளைகளில் இதன் மூலம் தமது மக்களுக்குத் தேவையான வார்த்தைகளையும் தேவன் கொடுக்கிறார்.
உதாரணம்: அப்போஸ்தலர் 16:16-18

10. பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல் I கொரிந்தியர் 12:10

அந்நிய பாஷையின் வாயிலாக சபைக்குச் சொல்லப்படுமு தேவ செய்தியைப் புரிந்துக் கொண்டு பக்திவிருத்தி அடைய தேவன் கொடுக்கும் திறன் பரிசுத்தாவியின் உதவியில்லாமல் வியாக்கியானம் செய்பவர் இயல்பாகவே சொல்லப்படும் வார்த்தைகளை உணர இயலாது. கவனிக்கவும். வியாக்கியானம் செய்வது என்பது மொழிபெயர்ப்பு அல்ல.

11. தீர்க்கதரிசனம் I கொரிந்தியர் 12:10

குறிப்பிட்ட நிகழ்கால அல்லது எதிர்கால சூழலைக்குறித்து தமது ஜனங்களுக்குத் தெரிவிக்க, தேவனால் அளிக்கப்படும் திறன்.
உதாரணம்: அப்போஸ்தலா21:9 - பிலிப்பின் 4 மகள்கள்
குறிப்பு: 9-11 பொதுவாக வார்த்தையின் வரங்கள் என அறியப்படுகின்றன.

12. விசுவாச வரங்கள் I கொரிந்தியர் 12:9

அசாத்தியமான காரியத்தைச் செய்து முடிக்கும்படி கர்த்தரை விசுவாசிக்க சில நபர்களுக்குத் தேவனால் அளிக்கப்படும் நம்பிக்கை
உதாரணம்: ஜார்ஜ் முல்லர் தனது அனாதை இல்லத்தின் தேவையை ஒருவருக்கும் அறிவிக்காமலேயே தேவன் தேவைகளைச் சந்திப்பார் என்ற விசுவாச வரத்தை உடையவராய் இருந்தார்.

GCI

13. குணமாக்கும் வரங்கள் I கொரிந்தியர் 12:9

இயற்கையான மார்க்கங்களின் வாயிலாக அல்லாமல் சுகமாக்கும்படி பரிசுத்தாவியால் அளிக்கப்படும் திறன்.

உதாரணம்: அப்போஸ்தலர் 3:1-10

14. அற்புதங்களின் வரம் I கொரிந்தியர் 12:10

கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினர் இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களைச் செய்ய பரிசுத்த ஆவியானவரால் அளிக்கப்படும் திறன்.

உதாரணம்: லூக்கா 8:24 – இயேசு கடலை அமைதிப்படுத்தல்

குறிப்பு: 12-14 பொதுவாக வல்லமை வரங்களாக அழைக்கப்படுகின்றன.

15. உதவிகள் (சேவை) செய்யும் வரம் I கொரிந்தியர்12:28, ரோமர் 12:7

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அங்கத்தினர் தங்களது தாலந்துகளை கிறிஸ்துவின் சரீரப்பக்தி விருத்திக்காகச் செயல்படுத்தும்படி கொடுக்கப்பட்டுள்ள திறன். இவை பலருக்கும் உதவிக்கரமாய் இருக்கக்கூடிய ஒன்று. இந்த வரம் தலைவர்கள் தங்கள் ஊழியங்களில் அதிகக் கவனத்தைச் செலுத்தி உதவி செய்யும் வரங்களுடையவர்களுடைய உதவியைப் பயன்படுத்த வழிவகை செய்யும்.

உதாரணம்: அப்போஸ்தலர் 6:1-4, 9:36

16. புத்தி சொல்லுதல்/ உற்சாகப்படுத்தல்: ரோமர் 12:8

சபையில் உள்ள விசுவாசிகள் உதவி பெறவும், ஊக்கமடையவும், உந்தப்படும் படியாகவும் கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கத்தினராகிய சிலருக்கு தேவனால் அளிக்கப்படும் திறன்.

GCI

17.கொடுத்தல் ரோமர் 12:8

பொருளாதார ரீதியாகவோ, பொருட்கள் மூலமாகவோ தேவனுடைய வேலை முன்னேறும் படியாக கிறிஸ்துவின் சபையிலுள்ள சில நபருக்குத் தேவனால் அளிக்கப்பட்ட திறன்.

18. தலைமைத்துவம்: ரோமர் 12:8

தேவனால் கொடுக்கப்பட்ட நோக்கங்களை அல்லது இலக்குகளை அடையும்படி மற்றவர்களை நடத்த ( ஆண்டு கொள்ள அல்ல) சிலருக்குக் கொடுக்கப்படும் திறன்.
உதாரணம்: அப்போஸ்தலர் 15:13,17

19. இரக்கஞ் செய்தல் ரோமர் 12:8

சிலருக்குக் கொடுக்கப்படும் மனதுருக்கத்தால் மற்றவர்களுடைய துக்கங்களைப் புரிந்து கொண்டு, உதவி, ஆறுதல் அல்லது தேவையுள்ளவர்களைப் பலப்படுத்துவதற்காக அளிக்கப்படும் திறன். இவர்கள் மூலமாக மற்றவர்கள் கிறிஸ்துவின் இரக்கத்தையும் அன்பையும் அனுபவிப்பார்கள்.
உதாரணம்: அன்னை தெரஸா
குறிப்பு: 15–19 ஆகியன ஊக்கமளிக்கும் வரங்கள் என அழைக்கப்படுகின்றன.

20. உபசரிப்பு: ரோமர் 12:13

தேவையுடன் இருப்பவர்களுக்கு உணவு, உறைவிடம் கொடுத்து அவர்களைத் தங்களில் ஒருவராகக் கருதச் செய்யும் அன்புள்ள இருதயம்.

21. நிர்வாக வரம் 1 கொரிந்தியர் 12:28
தனது நிர்வாகத் திறன் மற்றும் திட்டங்கள் மூலம் இலக்குகளை அடையவும்,

GCI

**கிறிஸ்துவின் சபை மிருதுவாக இயங்கவும் உதவி செய்யச் சிலருக்கு அளிக்கப்படும் திறன்.**

**22. திருமணம் செய்யாதிருத்தல் மத்தேயு 19:10-12**

**திருமணமாகாத நிலையிலும் மனநிறைவுன் தங்கள் வாழ்நாள் முழுவதும் குடும்பக் கவலையின்றி சுவசேஷ வேலைக்காக முழு கவனத்தையும் செலுத்த சில நபர்களுக்குக் கொடுக்கப்படும் திறன்.**

**23. பரிந்து பேசும் ஜெபம் லூக்கா 2:36-37**

**கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள சில நபர்கள் தங்களை ஜெபம் மற்றும் பரிந்து பேசுதலுக்காகக் கொடுக்க, அளிக்கப்படும் திறன்.**
**உதாரணம்: தீர்க்கதரிசியாகிய அன்னாள்**

**24. இசை வாசிப்பவர்கள்: I நாளாகமம் 15:20,21**

**தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் ஊழியஞ் செய்யும்படியாக ஆண்டவரை ஆராதிக்கும் வேளையில் உதவும்படி சிலருக்கு அளிக்கப்படும் திறன்.**

**25. பாடகர்கள் I நாளாகமம் 15:16**
**பாடல்கள் மூலமாகத் தேவனுக்கும் அவரது ஜனங்களுககும் ஊழியஞ் செய்யும் திறன்.**

## III. வெளிப்படையான வரங்கள் பற்றிய ஒரு பாடம் I கொரிந்தியர் 12:8-10

### வரங்களின் விளக்கம்

A. **வரங்களின் விளக்கம்**

உலகத்தை தற்போது ஆட் கொண்டிருக்கும் ஒரு பெரிய ஆவியின் எழுப்புதல் “அருட்கொடை எழுப்புதல்” என்றழைக்கப்படுகிறது.

இந்த எழுப்புதலின் மிகவும் முக்கியமான ஓர் அம்சத்தை விளக்கப்படுகிறது. ஆவியின் வரங்கள் (கிரேக்க பாஷை = அருட்கொடை) இப்போது சபைக்குத் திரும்பவும் கொடுக்கப்படுகின்றது. இவைகள் புதிய ஏற்பாட்டு சபையிலே மிகவும் வல்லமையாகக் காணப்பட்ட தெய்வீக வெளிப்பாடுகளை உருவாக்கி வருகிறது.

இந்த வெளிப்பாடுகள் அல்லது ஆவியின் வரங்கள் சபையில் பல நூற்றாண்டுகளாக. குறிப்பிடத்தக்க வகையில் இல்லாமல் போனது. கடந்த ஐம்பது வருடங்களாக அவை மறுபடியும் திரும்பக் கொடுக்கப்படுகிறது. மேலும் கடந்த முப்பது ஆண்டுகளாக அது மிகவும் துரிதமாகச் செயல்பட்டு வருகின்றது. ஒவ்வொரு கிறிஸ்தவ சபையையும் அருட்கொடை எழுப்புதல் ஊடுருவிச் சென்று, புதிய ஜிவனையும் வல்லமையையும் இயேசுவின் சபைக்குக் கொண்டு வருகின்றது. மறுபடியும் இந்த ஆசீர்வாதங்களைத் திரும்பப் பெறுவதனால், இந்த முக்கியமான காரியங்களைக் குறித்த போதனை அவசியமாகிறது. பவுல், கொரிந்து சபைக்குச் சொன்னார்.
“ சகோதரரே ஆவிக்குரிய வரங்களைக் குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை ( 1கொரி.12:1) இந்றைய விசுவாசிகளும் அறியாதிருக்க தேவனுக்குத் திட்டவட்டமாக எண்ணம் கிடையாது.

## 1. வரங்களின் வகைகள்

பலவிதமான அருட்கொடை வரங்களைப் பற்றி வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. முக்கியமான குறிப்புகள் அடங்கிய பகுதிகளாவன:

ரோமர் 12:3-8; 1 கொரிந்தியர் 12:8-10,28-30; எபபேசியர்4:11.

இந்த பாடத்தின் நோக்கத்தை நாம் 1 கொரிந்தியர் 12:8-10 இல் தொகுத்துக்

GCI

கூறப்பட்டுள்ள ஒன்பது திட்டமான வெளிப்பாடுகளுக்குள் வரையறுத்துக் கொள்வோம். அவைகளைப் பற்றிய நமது பாடக் குறிப்புகளை நாம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

a) பேசும் வார்த்தையின் வரங்கள்

1. அந்நிய பாஷைகளைப் பேசுதல்
2. பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல்
3. தீர்க்கதரிசனம் உரைத்தல்

b) வெளிப்படுத்தும் வரங்கள்

1. ஞானத்தைப் போதிக்கும் வரம்
2. அறிவை உணர்த்தும் வரம்
3. ஆவிகளைப் பகுத்தறியும் வரம்

c) திறமையின் வரங்கள்

1. விசுவாசத்தின் வரம்
2. குணமாக்கும் வரம்
3. அற்புதங்களைச் செய்யும் வரம்

<u>2. இந்த வரங்கள் செயல்பட ஆவியானவர் யாரைப் பயன்படுத்த முடியும்?</u>

a) (சபையாகிய) சரீரத்தின் எந்த அவயவமும் பயன்படுத்தப்பட முடியும் (1 கொரி.12:7, 11; 14:26,31). எந்த அவயவமும், யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய்க் காணப்பட வேண்டும். (1 கொரி. 1:7)

b) நாம் ஆவியினால் நிரப்பப்பட்டு இருக்க வேண்டும். (எபேசியர் 5:18)

c) இவ்வாறாக பயன்படுத்தப்பட நாம் வாஞ்சிக்க வேண்டும். (1 கொரி.12: 31)

d) ஆவியின் வரங்களைக் குறித்து நாம் அறியாமல் இருக்க கூடாது. (1 கொரி.12:1)

e) ஆவியின் வரங்களை நாடித் தேட வேண்டும் . (1 கொரி14:1–6)

GCI

f) நாம் சபையின் மேலுள்ள மெய்யான அன்பினால் உந்தித் தள்ளப்பட வேண்டும் (I கொரி. 13) மேலும் சபையை பக்திவிருத்தி பெறச் செய்ய மிகவும் வாஞ்சையுடன் இருக்க வேண்டும். (I கொரி.14:12)

g) வரங்களின் கிரியைகளில் நாம் தேறினவர்களாய் இருப்பதை நாட வேண்டும். (I கொரி 14:12)

## 3. பாஷைகளின் வரங்கள்

(I கொரிந்தியர் 12:10)

a) இரண்டு செயல்பாடுகள். இந்த ஆவியின் வெளிப்பாட்டிற்கு இரண்டு செயல்பாடுகள் உண்டு: முதலாவதாக "பக்தியின் பாஷையாக" அது பயன்படுத்துகிற மனுஷனைப் பக்திவிருத்திக்குள்ளாக்குகிறது.
இரண்டாவதாக, பாஷைகளின் வரமாக, அது பாஷைகளை வியாக்கியானம் பண்ணும் வரத்துடன் ஒரு இணைப்பாக வெளிப்படும் போது முழுச் சபைக்கும் பக்திவிருத்தி உண்டாகவும், தனி மனிதனின் அறிவை உணர்த்தவும் பயன்படுகிறது.

b) பொதுக் கூட்டங்களில் அந்நிய பாஷைகளை உபயோகிக்கும் நடைமுறைகள் :

1) அதன் உபயோகம் அன்பினால் உண்டாயிருக்க வேண்டும் (I கொரிந்தியர் 13:1)

2) அது அர்த்தஞ் சொல்லுதலோடு வெளிப்படவேண்டும் (I கொரிந்தியர் 14:5,13,28)

3) ஒரு பெரிய கூட்டத்தில் அது ஒரு நபரிடமிருந்து மூன்று முறையில் அடங்க வேண்டும் (I கொரிந்தியர் 14:27)

பாஷைகளைப் பேசுகிற எந்த விசுவாசியும், சபையைப் பக்தி விருத்தி அடையச்

GCI

செய்யும்படி பாஷைகளைப் பேசமுடியும் ஆகவே, நீங்கள் எப்பொழுதும் இவ்வாறு செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும்.

ஆவியானவரிடம் உங்களை ஒப்படைக்க நாடுங்கள். சிந்தைகளில், தாராளமாய் இருந்து பரிசுத்த ஆவியை ஏற்றுக்கொள்ள எப்பொழுதும் திறந்த மனதுடையவர்களாய் இருங்கள். ஆவியானவர் குறிப்பிட்ட ஆராதனையில் என்ன செய்ய நாடுகிறாரோ, அல்லது சொல்ல நாடுகிறாரோ, அதற்கு உணர்வுள்ளவராக இருக்கும்படி உணர்வுகளை வளர்த்துக் கொள்ளுங்கள். அநேக நேரங்களில் இது ஒரு மென்மையான தூண்டுதலாய் உங்களது ஆவியில் காணப்பட்டு, வளரும் ஆவலாய், எதிர்பார்ப்போடு இருக்கும். நீங்கள் உடனே பேசவேண்டிய அவசியமில்லை. தீர்க்கதரிசிக்குள் இருக்கும் ஆவி, தீர்க்கதரிசிக்குக் கீழ்ப்பட்ட (ஆளுகைக்குள் அடங்கிய) ஒன்று (I கொரிந்தியர் 14:32). நீங்கள் அமைதலாய் பேசுவதற்கான சரியான தருணத்திற்காய் காத்திருக்கலாம். பரிசுத்த ஆவியானவர் உங்களைத் திட்டவட்டமாக அந்த நேரத்தில் உணர்த்துவார். ஆராதனையில் ஏற்கனவே நடை பெறும் காரியங்களில் அவர் குறுக்கிடமாட்டார். அவர் ஒருபோதும் கலகத்திற்குக் காரணமாயிரார்; ஏனெனில் தேவன் கலகத்திற்குத் தேவனல்ல

(I கொரிந்தியர் 14:33)

அமைதியாகவும், நிதானத்துடனும் இருங்கள்; ஆவியானவர் தூண்டும்போது, சாதாரணமாக, எல்லோரும் கேட்கக் கூடிய தொனியில் பேசுங்கள்.

## 4.பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல்

(I கொரி 12:10)

இது பாஷைகளைப் பேசும் வரத்திற்கு, தோழமையான ஒரு வரம்; மேலும் அந்த வரத்தோடு இணைந்தே செயல்படும். பரிசுத்த ஆவியின் தெய்வீக நடத்துதலால்

இந்த வரம், சபையினர் விளங்கிக்கொள்ளும் பாஷையிலே அந்நிய பாஷைகளை, வியாக்கியானம் பண்ணும். இது மொழிபெயர்க்கும் ஒரு வரமல்ல. வியாக்கியானம் செய்கிறவர் பேசப்பட்ட அந்நிய பாஷைகளை அறிந்தவர் அல்லர்

a.யார் இந்த வரத்தை உபயோகிக்கலாம்? பல பாஷைகளை வியாக்கியானம் பண்ணும் வரம் ஆவியானவரின் சித்தத்தின்படி (Iகொரிந்தியர் 12:11) கொடுக்கப்படுகிறது. பல பாஷைகளைப் பேசுகிற யாவருக்கும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது: **"அந்நிய பாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம் பண்ணக் கடவன்"**

I கொரிந்தியர் 14:13

அந்த மனிதர் அந்நிய பாஷைகளில் பேசும் போது அமைதியாக அது முடியும் வரை காத்திருங்கள். நீங்கள் பேச ஆரம்பிக்கும்போது, உங்களிடத்தில் வியாக்கியானம் பண்ணுதலின் முதல் சொற்றொடர் மட்டுமே இருக்கலாம். அடுத்து என்ன பின்தொடரப் போகிறது என்பதைப் பற்றிய சிறு கருத்து இருக்கலாம்.

**"நமக்கு அருளப்பட்ட கிருபைக்கு"** (ரோமர் 12:6) மிஞ்சிப்பேசாமலிருக்கக் கவனமுள்ளவர்களாயிருங்கள்.

வியாக்கியானம் சொல்லுதல் முடிந்த பிறகு, ஆவியானவர் அவர் செல்ல வேண்டிய யாவற்றையும் சொல்லி முடித்ததாக நீங்கள் உணர்ந்த பிறகு, நிறுத்திவிடுங்கள் வியாக்கியானத்தை, வியாக்கியானம் செய்ய முயலாதிருங்கள் பரிசுத்த ஆவியானவரால் ஒவ்வொருவருக்கும் உணர்த்தப்பட்ட புத்திமதிகளையும், ஆறுதல்களையும், அவர்கள் எடுத்துக் கொள்ளும்படி விட்டுவிடுங்கள். வார்த்தைகளின் வரங்களை ஒழுங்காக அறிந்த விசுவாசிகள் யாரேனும் இருந்தால், உண்மையாகவே அது தேவனிடத்தில் இருந்து வந்தவையா என அதை அவர்கள் மதிப்பிட வேண்டும் I கொரிந்தியர்14:29

GCI

**<u>5. தீர்க்கதரிசன வரம்</u>** I கொரி 12:10

தீர்க்கதரிசனம் என்கிற வார்த்தையை, சாதாரணமாக மொழி பெயர்த்தால், அதின் அர்த்தம் தூண்டப்பட்ட வார்த்தைகளைச் சொல்வது என்பதாகும் I கொரிந்தியர் 14:31 –இன்படி, எல்லா விசுவாசிகளும், ஆவியின் சித்தப்படி இந்த வரத்தை, சில நேரங்களில் உபயோகிக்கலாம். ஒவ்வொருவரும் ஒருவர்பின் ஒருவராக தீர்க்கதரிசனஞ் சொல்லலாம். சபையில் அநேகர் வரத்தையுடையவராயிருந்து அதை உபயோகிக்கக் காத்திருக்கும்போது, தீர்க்கதரிசனம் சொல்லுதல் ஒரு நபருக்கு மூன்று முறைக்கு மேல் இருக்கக் கூடாது.

I கொரிந்தியர் 14:29-33

a) அதின் நோக்கம்: தீர்க்கத்தரிசனஞ் சொல்லுதலின் நோக்கம் என்னவெனில்:
   1. பக்தி விருத்தி அடையச் செய்வதற்கு: விசுவாசிகளைக் கட்டி எழுப்புவதற்கு.
   2. அறிவுறுத்துவதற்கு: விசுவாசிகளைத் தூண்டி, எதிர்ப்புகளைச் சமாளிக்கவும், சவால்களை எதிர்நோக்கவும் செய்வதற்கு:
   3. ஆறுதலளிப்பதற்கு: உற்சாகப்படுத்தும் வார்த்தைகளைப் பேசுவதற்கு. அநேக நேரங்களில், ஒரு தீர்க்கதரிசனம் இந்த மூன்று காரியங்களையும் உடையதாய் இருக்கும்.

b) தீர்க்கதரிசனத்தைப் பற்றிய மூன்று தவறான அபிப்பிராயங்கள்:
   1. அதைப் பிரசங்கம் பண்ணுதலோடு ஒப்பிட்டுக் குழப்பக் கூடாது. ஒரு பிரசங்கி தன்னுடைய சிந்தையையும், ஆவியையும் மிகவும் கவனத்தோடு ஆயத்தப்படுத்தினால், மக்கள் புரிந்து கொள்ளும் படி ஊழியம் செய்ய முடியும். அதற்கு மாறாக தீர்க்கதரிசன வரம் என்பது கவனமாகக் கற்பதின் விளைவு அல்ல. பொதுவாக அது, முன்னதாகவே மனதில் எண்ணப்படாமல், தானாகவே, ஆவியினால் நடத்தப்பட்டுப் பேசுவதாகும்.

GCI

2. தீர்க்கதரிசன வரம், எதிர்காலத்தைப் பற்றி முன்னறிவிப்பதற்கு உண்டானதல்ல. இந்த வரம் வெளிப்படையாய்ப் பேசுவதே யொழிய எதிர்காலத்தை முன்னறிவிப்பதல்ல. அதன் நோக்கம் பக்திவிருத்திக்கும் (கட்டுவதற்கும்), திட்டமாய் அறிவுறுத்துவதற்கும்(தூண்டுவதற்கும்)ஆறுதலுக்கும் (உற்சாகப்படுத்துவதற்கும்)தானேயொழிய, எதிர்காலக் காரியங்களை முன்னறிவிப்பதற்கு அல்ல. (I கொரி14:3ஐப் பார்) எப்பொழுதாவது எதிர்காலத்தைப் பற்றிய ஒரு சிறு குறிப்பு, தீர்க்கதரிசனஞ் சொல்லுதலுக்குள் அடங்கியிருக்குமாயின் அது அநேகமாக வேறொரு வரம் (அறிவை உணர்த்தும் வசனம் அல்லது ஞான வரம்) அதனோடு இணைந்து செயல்படுவதைக் குறிக்கும்.

3. இந்த வரம் தனிப்பட்ட வழிநடத்துதலுக்கு அல்ல. தனிப்பட்ட வழி நடத்துதல் நமக்கு அவசியமென்றால், நாம் இயேசுவானவரையே அதற்காகக் கேட்க வேண்டும் (யாக்கோபு 1:5)

c) தீர்க்கதரிசனஞ் சொல்லும் வரத்தைப் பற்றிய, வேதவாக்கியப் போதனை:

1. தீர்க்கதரிசனஞ் சொல்லுதல்: மனிதரோடு இயற்கைக்கு அப்பாற்பட்டுப் பேசுவதற்கேயாகும்(1கொரி 14:3) அது தேவனுடைய சிந்தையை சபைக்குத் தெரிவிக்கிறது.

2. தீர்க்கதரிசனத்திற்கு, அர்த்தஞ் சொல்ல அவசியமில்லை.

3. தீர்க்கதரிசனம், கல்லாதவனையும் திட்டவட்டமாய் உணர்த்துகிறது (I கொரி14:15,16) தீர்க்கதரிசன வரம் செயல்படுவதின் மூலமாக, ஒரு அவிசுவாசி:

GCI

- எல்லாவற்றையும் உணர்ந்து கொள்வான்.
- எல்லாராலும் நிதானிக்கப்படுவான்
- அவனது இருதயத்தின் அந்தரங்கங்கள் வெளியரங்கமாகும்
- முகங்குப்புற விழுந்து தேவனைப் பணிந்து கொள்வான்
- தேவன் உங்களுக்குள் மெய்யாய் இருக்கிறாரென்று அறிக்கையிடுவான்.
- தேவனைப் பணிந்து கொள்வான்.

4. விசுவாசிகள் அறிந்து கொள்ள தீர்க்கதரிசனம் உதவுகிறது. (Iகொரி14:3I) இது ஆவிக்குரிய சத்தியங்களை, ஆவியின் அபிஷேகத்தினால் கற்றுக் கொள்வதைக் குறிக்கும். இவ்வாறான போதனைகளை நாம் ஏற்றுக் கொள்வதற்கு முன்பு அவைகளை, தேவனுடைய வார்த்தையின் மூலமாகப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும்.

5. ஒவ்வொருவரும் இந்த வரத்தை விரும்பி, நாட வேண்டும் (I கொரி14:I,39). இவ்விதமாய், நாம் தேவனால் பயன்படுத்தப்பட்டு அவரது மக்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கலாம்.

6. இந்த வரத்தை உபயோகிக்கும் நபரே அதைச் சரியாகவோ அல்லது தவறாகவோ பயன்படுத்துவதற்கும் பொறுப்பாளராக இருக்கிறார். (Iகொரி.I4:32) தேவனுடைய சார்பாக, தீர்க்கதரிசி பேசுகிறான். மேலும் தீர்க்கதரிசி எல்லா நேரங்களிலும் தான் பேசுவதைக் கட்டுபடுத்த முடியும்.

GCI

7. தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவர்கள் தவறாய்க் கூற முடியும்: ஆதலால் தீர்க்கதரிசனத்தை நிதானித்து அறிய வேண்டும். (1கொரி 14:29; உபாகமம் 18:20-22 ; எரேமியா 14:14,15 23:30)

8. தீர்க்கதரிசனத்தை நிதானிப்பதற்கு உள்ள வழிமுறைகள்:

a) அது ஒரு போதும் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைக்கு முரண்பாடாக இருக்க கூடாது. எனவே ஒவ்வொரு தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும், தேவனுடைய வார்த்தையின் படி ஆராய்ந்து அறியப்பட வேண்டும். தேவன் செய்யக்கூடாது என்று கூறுவதை நீ செய்யும்படி ஒருபோதும் தீர்க்கதரிசனத்தின் மூலம் ஒருவர் சொல்ல மாட்டார்.

b) அது எப்பொழுதும் இயேசு கிறிஸ்துவை மகிமைப்படுத்த வேண்டும் ; ஒரு போதும் இழிவுபடுத்தக்கூடாது.

c) அது விசுவாசிகளைப் பக்தி விருத்தியடையச் செய்ய. அறிவுரை பெற, தேற்ற வேண்டும். அது ஒரு போதும் அவர்களைக் குழப்பவோ, கவலைப்படுத்தவோ கூடாது; தெளிவு பெறாத நிலைமையில் அவர்களை விடக் கூடாது.

d) பெரும்பான்மையான விசுவாசிகள் இருக்கும்போது அது வெளியே சாட்சியாய் வரவேண்டும் – குறிப்பாக முதிர்ச்சி பெற்றவர்கள் அடிக்கடி வார்த்தையின் வரங்களைத் தாங்களே உபயோகிப்பவர்கள் சாட்சி கொடுக்கலாம்.

e) கூடுகையின் ஆவியை அது உடைக்க கூடாது. ஆனால் அதன் திசையை மாற்றலாம்.

f) எதிர்காலத்தைப் பற்றிய குறிப்பு இருக்குமாயின், அது நடக்க வேண்டும்

g) அது கனிகளைப் பற்றிய பரீட்சையில் தேர்ச்சி பெற வேண்டும். (மத்தேயு 7:16) கள்ளத் தீர்க்கதரிசிகளைப் பற்றிச் சொல்லும் போது, இயேசு, அவர்களுடைய கனிகளினாலே அவர்களை

GCI

அறிவீர்கள் என்றுரைத்தார். தீர்க்கதரிசனம் என்கிற பேரில் வருகிற, இயேசுவின் காரியங்களுக்கு எதிர்மறையாய்ச் செயல்படும் ஒரு தீர்க்கதரிசியின் வாழ்க்கைக்கும். நடை முறைக்கும் எதிராக நாம் மந்தையைக் காத்துக் கொள்ள வேண்டும்.

9. எப்படி தீர்க்கதரிசனம் உரைப்பது. தளர்த்திக் கொடு, ஒரு அழுத்தமான நிலைக்குள் இருக்க வேண்டாம். உனது ஆவிக்குள்ளாக, கர்த்தருக்குக் காத்திரு. அவரது சத்தத்திற்கு உனது சிந்தையைத் திறந்து வை. உன் விசுவாசத்திற்கு மிஞ்சி, தீர்க்கதரிசன ஞ் சொல்ல வேண்டாம். (ரோமர் 12:6) ஆவியானவர் எப்போது பேசுவதை நிறுத்தினாரோ, அப்போது நிறுத்தி விடு!

## 6. அறிவை உணர்த்தும் வசனம்

(I கொரி.12:8)

விளக்கம்: அறிவை உணர்த்தும் வசனம் என்பது தேவனுடைய அறிவின் ஒரு சிறு துகள் அல்லது பகுதியாகும். அது ஒரு மனிதனுக்குப் பரிசுத்த ஆவியினால் கொடுக்கப்படுகிறது. அது பரிசுத்த ஆவியினால் வெளிப்படுத்தப்படும். இயற்கைக்குப்பாற்பட்ட சில உண்மைகளையும், விவரங்களையும் நமக்குத் தெரிகிறது. இந்தச் செய்தி முன்பே ஒரு மனிதனுக்குத் தெரிந்திருக்காது; மேலும் சாதாரண காரியங்களால் இந்த அறிவைப் பெற்றுக் கொள்ளவும் முடியாது. இது இயற்கைகப்பாற்பட்ட நிலையில் கொடுக்கப்படுகிறது.

a) வேத வாக்கியங்களிலிருந்து உதாரணங்கள்:

1. இயேசுவின் ஊழியத்தில் இயேசு நாத்தான் வேலைக்குறித்த சில உண்மைகளை, அவனைப் பார்க்கும் முன்பே அறிந்திருந்தார்

GCI

(யோவான் 1:47-50) இயேசு சமாரிய ஸ்தீரியைப் பற்றிய பல உண்மைகளை, அவளை முன்பே பார்த்திராவிட்டாலும் அறிந்திருந்தார் (யோவான்4:18-20) அவளது முந்தைய மற்றும் நிகழ்கால வாழ்க்கையைக் குறித்து, அவர் அறிந்ததைக் கண்டு அவள் ஆச்சரியப்பட்டாள். இந்த அறிவை உணர்த்தும் வசனம் செயல்பட்ட போது ஒரு பெரிய எழுப்புதலைக் கொண்டு வந்தது.

2. ஆதித் திருச்சபையில், அனனியா சவுலைப் பற்றிய திட்டவட்டமான விவரங்களை, (அவனை அதற்கு முன்பு பார்த்திராவிட்டாலும்) தெளிவாகப் பெற்றிருந்தான்.

3. பழைய ஏற்பாட்டில் 2 சாமுசூவல் 12:1-14 வேத பகுதியில், கர்த்தர் நாத்தானுக்கு, தாவீது செய்த பாவத்தைக் குறித்த உண்மைகளையும் விவரங்களையும் வெளிப்படுத்தினார்.

b) வேறுபட்ட தன்மை.

அறிவை உணர்த்தும் வசனம், இயற்கையான முறைகளால் பெறப்படும் மனித அறிவுக்கு வேறுபட்டது. அறிவை உணர்த்தும் வசனத்தை, புத்திக்கூர்மையான படிப்பினால் பெற முடியாது. புத்தகங்களைப் படிப்பதாலோ, அல்லது கல்லூரியிலோ, கலாசாலையிலோ, பாடங்களைப் பயில்வதாலோ இதைப் பெற முடியாது. இது வேதாகமத்தைப் படிக்கவோ, அல்லது புரிந்து கொள்ளவோ அல்லது அர்த்தங்களை விளக்கவோ கொடுக்கப்படும் திறமையும் அல்ல.

c) வேத வாக்கியங்களில் இதனை உபயோகிக்கும் விதம்:

1. பாவத்தை வெளிக் கொண்டுவர (2 சாமுவேல் 12:1-10; அப்5:1-11)
2. மக்களை தேவனிடத்திற்கு நடத்த (யோவான் 1:47-50;4:18-20)

3. அறிவுரை கூறவும, சரியான பாதையில் நடத்தவும் (அப்9:11)

GCI

4. சோர்ந்து போன நேரத்தில், தேறுதல் அளிக்கவும் (I இராசு.19:9-18)

5. வருங்காலக் காரியங்களைக் குறித்த அறிவைக் கொடுக்கவும. (அப்.11:27,28)

6. மறைப் பொருட்களை வெளிப்படுத்தவும் (I சாமுவேல் 10:22)

d) இந்த வரத்தை உபயோகிக்கும் முறை.

1. இது இயற்கைக்கப்பாற்பட்ட தன்மையுடையது. சரியான அறிவினாலோ கண்டுபிடிப்பினாலோ பெற முடியாது. நம் உணர்வுகளினாலும், பெற முடியாது. ஆனால் பரிசுத்த ஆவியின் மூலம், இயற்கைக்கப்பாற்பட்ட ஒரு வெளிப்பாடாக பெற முடியும்.

2. இது விசுவாசத்தினால் செயல்படுகிறது. வெளிப்பாட்டைப் பெறுகிற மனுஷன், அதை விசுவாசத்தினால் பெற்றுக் கொள்கிறான்.

3.இந்த வெளிப்பாடு ஆவியிலே பெறப்படுகிறது. புத்திக் கூர்மையினாலோ உணர்ச்சிவசப்படுவதாலோ அல்ல.

4. இது பேச்சின் மூலம் மட்டுமே பெறப்படும் வரம் அல்ல. இதை அமைதியாக ஒருவர் தம் ஆவியில் பெற்றுக் கொள்ளலாம். பிறர் கேட்கும் விதமாகவும் பெறலாம்.

5. மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும் போது அது சத்தத்தோடு வரலாம். (யோவான் 4:4-7; 18)

6. தேவனுடைய வார்த்தையைக் கேட்க விரும்பும், எந்த ஒரு ஆவியின் நிறைவைப் பெற்ற கிறிஸ்தவனும் இந்த வரத்தை அனுபவிக்கலாம்.

GCI

7. அறிவுரை வழங்கும் ஊழியத்தில் இது ஒரு விலைமதிப்பற்ற சொத்து.

8. கீழ்ப்படிதலும், அதன்படி நடத்தலும், ஒரு நபரின் ஊழியத்திலே, இந்த வரம் தொடர்ந்து செயல்பட மிகவும் அவசியம்.

9. அநேக நேரங்களில் ஞானத்தைப் போதிக்கும் வரத்தோடு இணைந்து வெளிப்படும். அறிவை உணர்த்தும் வசனத்தை எவ்வாறு சரியாக, சரியான நேரத்தில் பயன்படுத்துவது என்பதை தெய்வீக ஞானத்தினால் அறியமுடியும்.

## 7. ஞானத்தைப் போதிக்கும் வசனம்

(I கொரி12:8)

இந்த வரம் முக்கியத்துவத்தின் பட்டியலிலே தலையாய இடத்தில் காணப்படுகிறது. தெய்வீக ஞானத்தோடு பேசவும், செயல்படவும், நமக்கு உதவுகிறது. இப்படியாக மற்ற வரங்கள் சரியானபடி உபயோகப்படவும், செயல்படவும் வழி வகுக்கிறது. ஞானத்தைப் போதிக்கும் வசனம் இல்லையெனில், மற்ற வரங்கள், குழப்பத்தை உண்டுபண்ணக் கூடிய வகையில் தவறாக உபயோகிக்கப்படலாம்.

a) விளக்கம். ஞானத்தைப் போதிக்கும் வசனம், பரிசுத்த ஆவியினால் அளிக்கப்படும் தெய்வீக ஞானத்தின் ஒரு சிறு பகுதியாகும். அது, குறிப்பிட்ட சூழ்நிலையில் என்ன சொல்ல வேண்டும் அல்லது செய்ய வேண்டும் என்பதை உடனடி ஞானத்தின் மூலம் ஒருவனுக்கு அளிக்கிறது.

தேவன் அநேக நேரங்களில் இந்த வரத்தை அறிவை உணர்த்தும் வசனத்தோடு கூட அளிக்கிறார்; எனவே விசுவாசிகள் அறிவை உணர்த்தும் வசனத்தை எப்படி உபயோகிப்பது என்று அறிய முடியும்.

GCI

தேவன், அனனியாவுக்கு, சவுலின் நிலைமையையு, அவனிருக்குமி டத்தையும், அறிவை உணர்த்தும் வசனத்தினால் வெளிப்படுத்தினார். இந்தக் கஷ்டமான சூழ்நிலையிலே, அவர் ஞானத்தைப் போதிக்கும் வசனத்தினால், அனனியா செய்ய வேண்டியது என்ன என்று காண்பித்தார்.

b) உதாரணங்கள் மூலம் விளக்கம். ஒரு மனிதன் சட்டத்தின் குழப்பங்களில் சிக்குண்டு ஒரு வக்கீலின் உதவியை நாடுகிறான். அந்த வக்கீல் அவனுக்கு தனக்குள்ள எல்லா ஞானத்தையும், அறிவையும் கொடுக்க மாட்டான். தனக்குள்ள அறிவிலிருந்து, ஒரு வார்த்தையை அல்லது ஒரு பகுதியை எடுத்து தனது வாடிக்கையாளரின் தேவைக்கேற்பச் சொல்லுவான்.இவ்வாறாகவே, தேவன் (சகலத்தையும் அறிந்த தேவன்) தனது எல்லையில்லா ஞானத்தின் பெட்டகத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட பகுதியை தேவையுள்ள தனது பிள்ளைக்குக் கொடுக்கிறார். அவர் இதை ஆவியானவரின் மூலம் அனுப்புகிறார்.

c) வேறுபாடு:

ஞானத்தைப் போதிக்கும் வசனம்

1. ஒரு இயற்கையான ஞானமல்ல
2. கல்வியறிவினால் பெறும் ஞானமல்ல
3. அனுபவத்தினால் பெறும் ஞானமல்ல
4. வேதாகமத்தைப் புரிந்து கொள்ளக் கொடுக்கப்படும் ஞானமல்ல
5. இயற்கைக்காப்பாற்பட்ட தன்மையுடையது
6. பரிசுத்த ஆவியானவர் அவரது சித்தத்தின்படியே கொடுக்கிறார் (1 கொரி. 12:11)
7. ஒரு குறிப்பிட்ட தேவைக்கோ, நிலைமைக்கோ அளிக்கப்படுகிறது.
8. ஞான வரமல்ல, ஞானத்தைப் போதிக்கும் வசனமாகும்.

GCI

d) வேதாகமத்திலிருந்து சில உதாரணங்கள்

1. லூக்கா 4:1–13. இயேசு வனாந்தரத்திலே சோதிக்கப்பட்டார். இயேசு சாத்தானுக்குப் பிரதியுத்திரமாகச் சொன்ன பதில்கள், பரிசுத்த ஆவியினால் கொடுக்கப்பட்ட ஞானத்தின் வசனங்களே.

2. லூக்கா 20:22–26 வேதபாரகர், இயேசுவிடம் குற்றம் கண்டு பிடிக்க முயற்சி செய்தார்கள். ஆனால் ஆவியானவரால் அனுப்பப்பட்ட ஞானத்தைப் போதிக்கும் வசனம் அவர்களை ஆச்சரியப்படவைத்து மவுனமடையச் செய்தது.

3. யோவான் 8:3–11 மறுபடியும் வேதபாரகரும், பரிசேயரும், இயேசுவைத் தந்திரமாய்ப் பிடிக்க வகை தேடினார்கள். ஆனால் அவரது ஞானமான வசனங்களும், அந்த நிலைமையை அவர் கையாண்ட விதமும் அவரது எதிரிகளும் ஆச்சரியப்பட வைத்தது.

4. அப்போஸ்தலர் 27:23–24 பவுலுக்கு, நிலைமையைச் சமாளிக்கவும், பல உயிர்களை அதன்மூலம் மீட்கவும் கொடுக்கப்பட்டது.

e) கவனிக்க. ஞானத்தைப் போதிக்கும் வசனம், இயேசுவின் சீஷர்கள் யாவருக்கும் வாக்கு பண்ணப்பட்டது. "ஆகையால் என்ன உத்தரவு சொல்லுவோமென்று கவலைப்படாதிருக்கும்படி, உங்கள் மனதிலே நிர்ணயம் பண்ணிக் கொள்ளுங்கள். உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர் பேசவும் எதிர் நிற்கவும் கூடாத வாக்கையும், ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன்." ( லூக்கா 21: 14–15)

குறிப்பு: ஞானத்தைப் போதிக்கும் வசனம், குறிப்பாக ஒரு பேச்சின் வரமல்ல, ஆனால் ஒரு வெளிப்படுத்தும் வரம். அது அமைதியாக

GCI

ஒருவனின் சிந்தையிலோ அல்லது ஆவியிலோ பெறப்படுகிறது. பெரும்பாலும் அது அறிவுரை சொல்லும் போதோ, பிரசங்கிக்கும் போதோ அல்லது தீர்க்கதரிசனம் உரைக்கும் போதோ கொடுக்கப் படுகிறது; அல்லது தேவனுடைய கட்டளை ஒன்று கொடுக்கப்படும் போது செயல்படுகிறது. அதன் மூலம் அந்தக் கட்டளைக்கு நாம் எவ்வாறு செவிசாய்ப்பது என அறியக்கூடும்.

## 8. ஆவிகளைப் பகுத்தறிதல்

I கொரி.12:10

ஆவிகளைப் பகுத்தறிதல் என்பது நாம் சாதாரணமாக எண்ணுவதை விட மிக முக்கியமான காரியமாகும். இந்த ஆவிக்குரிய வரத்தை நாம் பேய்களை விரட்டும் போது இன்னுமதிகமாக உபயோகித்தால், நாம் சந்திக்கிற பல பிரச்சனைகள் குறைந்துவிடும். ஆவிகளைப் பகுத்தறியும் வரம், வெளிப்படுத்தும் வரங்களில் மூன்றாவது வரமாகும். (அறிவை உணர்த்தும் வசனமும் ஞானத்தைப் போதிக்கும் வசனமும் மற்ற இரண்டு வரங்கள்) அது பரிசுத்த ஆவியினால், நாம் ஆவிக்குரிய காரியங்களைக் கண்டுணர்ந்து சாத்தானுடைய ஆவிக்கும் ( பொல்லாத ஆவிகள்) தேவனுடைய ஆவிக்கும், மனுஷ ஆவிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைக் கண்டு கொள்ளகக் கொடுக்கப்படுகிறது. இந்த வரத்தினால், நாம் சில நடவடிக்கைகள், போதனைகள், சந்தர்ப்பங்கள் முலானவற்றின் துவக்கத்தையும் அதைத் தூண்டிவிட்ட மனுஷ அல்லது பொல்லாத ஆவிகளையும் பகுத்தறிந்து கொள்ள முடியும். மற்ற இரண்டு வெளிப்படுத்தும் வரங்களை விட, இது மிகவும் குறைந்து காணப்படுகிறது. ஆனாலும் ஆவிகளைப் பகுத்தறியும் வரமும், மற்ற வரங்களைப் போலவே, அதன் செய்கையில் இயற்கைக் கப்பாற்பட்டது. வேறு எந்த வழியிலும் பெற முடியாத தேவையான உள்ளுணர்வுகளைத் தருகிறது.

GCI

a. **இந்த வரத்தின் செயல்பாடு.** ஆவிகளைப் பகுத்தறியும் வரம் ஒருவனுக்கு, ஆவிகளின் தன்மைகளையும், நடவடிக்கைகளையும் புரிந்து கொள்ளக் கூடிய ஒரு இயற்கைக்கப்பாற்பட்ட அறிவைத் தருகிறது. தெய்வீகத்திற்கும் சாத்தானுக்கும் மற்றும் மனுஷ ஆவிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைக் காணவும், மற்றும் ஆவிகளின் இயல்புகளை உணரவும் அது ஒருவனுக்கு உதவுகிறது. பரிசுத்த ஆவியின் கிரியைகளைப் போன்று, போலியான ஒன்றைச் செய்யவே சாத்தான் எப்பொழுதும் நாடுகிறான். அநேக நேரங்களில் அவனது போலித்தனம் உண்மையான ஒன்றைப் போலவே காணப்படுகிறது. நாம் அதை நம்பி ஏமாறக்கூடும். அப்போஸ்தலர் 16 ஆம் அதிகாரத்தில் குறி சொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்ட ஒரு பெண்ணைப் பற்றிய காரியத்தில் பவுல் அந்த ஆவிக்குச் சவால் விடுகிறார். ஒரு வேளை அது மற்ற தேவனுடைய ஊழியக்காரரை எளிதாய் ஏமாற்றியிருக்கக்கூடும். அந்தப் பெண் மிகச் சரியானதொரு உண்மைக் கூற்றைச் சொல்கிறாள்: “இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழிக்காரர்,இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்.” ஆனால் இப்படிப் பேசுகிற ஆவி ஒரு பொல்லாத ஆவியாகும்.

b. இன்று இந்த வரத்தின் செயல்பாடும் தேவையும். சபையானது தனது முழுப் பணியையும் செய்து முடிக்க வேண்டுமானால் இந்த வரத்தின் செயல்பாடு மிகவும் இன்றியமையாததொன்றாகும். அதன் மூலம் பொல்லாங்கனின் கிரியைகளை அழிக்க முடியும். இந்த தெய்வீக வரம் குறிப்பாக அருட்பணியாளர்களுக்கும், மற்றும் தீய ஆவிக் களியாட்டம், சாத்தானின் காரியங்கள், மந்திர தந்திரங்கள் நிறைந்த நிலப்பரப்புகளில் வேலை செய்யும் பணியாட்களுக்கும் மிகவும் இன்றியமையாதது.

GCI

C. ஆவிகளைப் பகுத்தறியும் இந்த வரம் எவ்வாறு செயல்படுகிறது. முதலாவதாகவும், மிகவும் எளிதாய்ப் புரிந்து கொள்ளத்தக்கதாகவும் உள்ள இதன் வேலை, மக்களின் வாழ்க்கையிலும், சபையிலும் உள்ள தீய ஆவிகளை வெளிப்படுத்துவதாகும். ஆயினும், இது ஒரு தீர்க்கதரிசன செய்தி, ஒரு குறிப்பான உபதேசம் அல்லது இயற்கைக் கப்பாற்பட்ட ஒரு திருஷ்டாந்தம் இவைகளின் மூல அடிப்படையை நிர்ணயம் செய்கிறது. இந்த வரத்தையுடைய மனுஷன், ஒரு செய்தி அல்லது நடக்கையின் மூல காரணம் பிசாசினாலுண்டானதா, தெய்வீகமானதா அல்லது வெறும் மனுஷீகமா என்பதைச் சொல்ல முடியும். அந்த மூல காரணம் பிசாசினுடையது என்று பகுத்தறியப்பட்டால், இந்த வரத்தையுடைய நபர் இவற்றை வெளிப்படு த்தவும் முடியும்:

1. **பிசாசின் தன்மை** பொய் சொல்வதோ ஊனம் உண்டாக்குவதோ (புற்று நோய், பார்வையின்மை, செவிடு போன்றவை) அசுத்தமான செய்கைகளும் இதைப் போலொத்தவையும் அவனது கிரியைகளாகும்.

2. **பிசாசின் பெயர்** இது சாதாரணமாக, பிசாசின் தன்மையோடு கூட வெளிப்படுத்தப்படும் ஆயினும் பிசாசின் சரியான பெயர் வெளிப்படுவதும் அசாதாரணமான ஒன்றல்ல.

3. **பிசாசுகளின் எண்ணிக்கை** லேகியோன் காரியத்தில் இது நடை பெற்றது. (மாற்கு 5:1–9) மேலும் இயேசு, மகதலேனாள் என்னப்பட்ட

மரியாளிடமிருந்து ஏழு பிசாசுகளைத் துரத்தினார் (லூக்கா 8:2) ஒரு நபரை ஒரு ஆவிக்கும் அதிகமாகப் பிடிப்பது என்பது பொதுவானதே.
இது ஆவிகளைப் பகுத்தறியும் வரம் வெளிப்படுத்தும் செய்தியின் ஓர் அம்சமாகும்.

GCI

**4. குறிப்பிட்ட பிசாசுகளின் பலம்** அநேக நேரங்களில் தீய ஆவிகளோடு நடைபெறும் நேரடித் தாக்குதலில், ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தைச் செயல்படுத்தும் நபர், அநேக ஆவிகளில், எந்த ஆவி மிகவும் வலிமை வாய்ந்தது மற்றும் எந்த ஆவி பெரிய அதிகாரம் உடையது என்றும் அறிவார்.

**5. விஷயங்களைப் பெற்றுக் கொள்வது.** அநேக நேரங்களில் பிசாசுகள், தங்களைப் பற்றிய விஷயங்களை, அவைகளைப் பற்றிப் பகுத்தறிந்தவர்களுக்கும் அவைகளை விரட்ட வல்லமை பெற்றவர்களுக்கும், பேச்சினாலே சொல்லிவிடும்.ஆனாலும், பிசாசுகள் பொய் சொல்வதில் திறமை பெற்றவைகளானதால், அவை சொல்லும் விஷயங்களைச் சந்தேகத்தோடு நோக்குவது நல்லது. அவற்றைப் பரிசுத்த ஆவியானவர் வழங்கும் தெய்வீகமான உள் நோக்கோடும், அறிவோடும் வகையறுத்துப் பார்ப்பது நல்லது.

d. ஆவிகளைப் பகுத்தறியும் வரம், எல்லா நேரங்களிலும் ஒருவனுக்கு பிசாசுகளைத் துரத்துவதற்கு விசுவாசத்தைக் கொடுப்பதில்லை. ஆவிகளைப் பகுத்தறியும் வரம், திட்டவட்டமான விடுதலைக்கு முக்கியமானது என்றாலும், அது மட்டும் தன்னில் தானே போதுமானதல்ல. அது விசுவாசம், அற்புதங்களின் வரம் இவைகளோடு இணைந்து செயல்பட வேண்டும். இந்த வரங்களோடு செயல்படுகிற மக்களே, அநேகமாகப் பிசாசுகளைத் துரத்துவதில் பெரிய வெற்றியைப் பெறுவார்கள்.

## 9. விசுவாசத்தின் வரம்

I கொரி.12:9

விசுவாசம், அநேகமாக எதிர் காலத்தைக் குறித்தும், காணாதவைகளைக் குறித்தும் மற்றும் நடைபெறக்கூடாத காரியங்களைக் குறித்தும் விவரிக்கிறது. விசுவாசத்தில்

GCI

வரம் என்னும் விசேஷித்த அநுக்கிரகம் தேவனால் ஒருவனுக்குக் கொடுக்கப்படுகிறது தேவன் அவர்களோடு பேசியதின் மூலம். நடக்கக்கூடாத செயல்முறை அடிகளை எடுத்து வைக்கும்படி அவர்களை அழைக்கிறார்.

விசுவாசத்தின் வரம் என்பது தேவன் ஒரு ஆவியில் நிறைந்த விசுவாசிக்கு அளிக்கிற விசேஷித்த வகையான விசுவாச வெளிபபாடாகும். தேவன் அந்த விசுவாசிக்குக் கொடுத்த வேலைக்கென சாதாரண அல்லது பொதுவான விசுவாசத்தை விடப் பெரியதான விசுவாசம் தேவைப்படும் போது அது வெளிப்படுகிறது.
பொதுவான விசுவாசம், தேவனுடைய வார்த்தையை உட்கொண்டு, அதை வாழ்க்கையின் சூழ்நிலைகளில் அப்பியாசப்படுத்தும் போது வளருகிறது. அது மிகப் பெரிய உச்ச நிலையை எட்டக்கூடும். ஆனாலும் விசுவாசத்தின் வரத்திற்கு பொதுவான விசுவாசத்தின் உச்ச அளவை விட ஒரு மேலான செயல்பாடு உண்டு.

a. விசுவாச வரம் எப்படி வேலை செய்கிறது?
விசுவாச வரம் வேலை செய்வது போல் செய்கையிலே திட்டவட்டமாகத் தோன்றாவிட்டாலும் அது மெதுவாக வேலை செய்கிறது. ஆனால் எல்லாச் சமயங்களிலும் இவ்வாறு நடப்பதில்லை. சிங்கங்களின் வாயிலிருந்து தானியேல் காப்பாற்றப்பட்ட விதம், விசுவாச வரத்தின் மென்மையான செயல்பாடு ஆகும். விசுவாச வரம் மென்மையாகச் செயல்படுகிறது என்கிற எண்ணம் தோன்றுகிறது: ஏனெனில், அது அநேக சமயங்களில், அதிக ஆவலைத் தூண்டும் வரங்களோடு இணைந்து கிரியை செய்கிறது.
( உதாரணமாக அற்புதங்களைச் செய்யும் வரம், சுகமாக்கும் வரம் போன்றவை)

விசுவாச வரம், கட்டளை கொடுக்கும் வார்த்தைகள் மூலமாயும், விசுவாச வார்த்தைகள் மூலமாயும் கூடச் செயல்படுகிறது. "விசுவாசித்தேன் ஆகையால் பேசினேன்" (2 கொரி 4:13) அவ்வாறான வார்த்தைகளை

GCI

தேவனுடைய மனுஷன், ஆவியினால் உந்தப்பட்டுப் பேசும்போது அவைகளை தேவன் தனது சொந்த வார்த்தையாகவே உறுதிப்படுத்துகிறார். இதன் விளைவுகள் உடனடியாக எப்பொழுதும் காணப்படாவிட்டாலும், அவைகள் நிச்சயமானது. மேலும் இந்த வரம் பல வழிகளில் செயலாற்றக் கூடும். (உதாரணமாக, ஆசீர்வதிக்க, சபிக்க, உருவாக்க, அழிக்க போன்றவை) பேசப்படும் வார்த்தைகளால் கிரியை செய்கின்ற இந்த விசுவாச வரத்தின், சில குறிப்பான உதாரணங்கள்:

1. யோசுவா, சூரியனையும், சந்திரனையும், தரித்து நிற்கும்படி கட்டளை கொடுப்பது (யோசுவா 10:12-14)

2. எலியா, தன் வார்த்தையினால் காலச் சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்துவது. "என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும்... அப்பொழுது மூன்று வருஷமும் ஆறு மாதமும் பூமியின் மேல் மழை பெய்யவில்லை." ( I இராஜாக்கள் 17:1; யாக்கோபு 5:17)

3. பவுல் எலிமாவை வாயடைத்தல். "சில காலம் சூரியனைக் காணமால் நீ குருடனாயிருப்பாய்" ( அப்போஸ்தலர் 13:8-11)

4. பேதுரு, தேவனுடைய நியாயத்தீர்ப்பை , அனனியா, சப்பீரா‌ள் மேல் உரைத்தல். (அப்போஸ்தலர் 5)

வேத வாக்கியங்கள் விசுவாச வரத்தின் பொதுவான உண்மைகளைப் போதிக்கிறது: "... தான் சொன்னபடியே நடக்கும்.... என்று விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும்..." தொடர்கின்ற கட்டளையின் தொடர்போடு, "தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்." ( மாற்கு 11:22-23). மேலும் "நீர் ஒரு காரியத்தை நிருணயம் பண்ணினால், அது உமக்கு நிலைவரப்படும்." ( யோபு 22:28)

## 10. குணமாக்கும் வரங்கள்

GCI

I கொரி I2:9

இந்த வரத்தைக் குறித்து I கொரிந்தியர் I2 ஆம் அதிகாரத்தில, 9,28,30ஆம் வசனங்களில் மூன்று குறிப்புகள் காணப்படுகின்றன. இவைகள் ஒவ்வொன்றிலும், மூல பாஷை "காரிஸ்மாடா, இயமாடன்" என்பதே. இந்த இரண்டு வார்த்தைகளும் பன்மையில் உள்ளது. இந்தப் பதத்தின் சரியான மொழிபெயர்ப்பு: "குணமாக்கும் வரங்கள்" என்பதாகும்.

குணமாக்கும் வரங்களானது, எந்தவிதமான இயற்கையின் அனுகூலமும் இன்றி, தெய்வாதீனமாகச் செயல்பட்டு வியாதிகளையும், சரீரக் குறைபாடுகளையும் குணமாக்குகிறது. பரிசுத்த ஆவியின் வல்லமை ஒரு நபரின் சரீரத்தின் மேல் வருவதினால், வியாதிகளை அகற்றி வலிகளை விரட்டி, குணப்படுத்துகிறது. குணமாக்கும் வரங்கள் என்கிற பன்மைச் சொற்றொடர், பல தரப்பட்ட வியாதிகளுக்கு, பலவிதமான குணமாக்கும் வரங்கள் உண்டு என்பதை விளக்குகிறது. குணமாக்கும் வரங்களுடைய சிலர் செவிடு அல்லது புற்று நோய் ஆகியவற்றை குணமாக்க வல்லவராயும் இருக்கமுடியும்.

இயேசு, எல்லாவிதமான நோய்களினின்றும், சோர்வுகளினின்றும், குறைகளினின்றும் துயரங்களினின்றும் பயங்கரமான தொற்று நோய்களினின்றும் விடுவிப்பார். இந்த வரத்தின் வெளிப்பாடு பெரிய அளவிலே பலதரப்பட்டுக் காணப்படுகிறது.(Iகொரி.I2: 4-7) குணமாக்கும் வரங்களின் செயல்பாடு, இந்த வரத்தைப் பெற்றவனுக்கு எல்லா நேரங்களிலும், எல்லாவிதமான வியாதிகளையும் சுகமாக்குவதற்குத் திறமையைக் கொடுப்பதில்லை.

a. குணமாக்கும் வரங்கள் கொடுக்கப்படுவதின் நோக்கங்கள்

I. வியாதியஸ்தர்களையும், சுகவீனரையும் விடுவிக்கவும், பிசாசினுடைய கிரியைகளை மனுஷ சரீரங்களிலிருந்து அழிக்கவும்

GCI

(1 யோவான் 3:8 அப்.10:38, லூக்கா 13:16)

2. தான் தேவனுடைய குமாரன் என்று இயேசு சொன்னதை நிரூபிக்கவும்
யோவான் 10:36-38
3. வசனத்தை உறுதிப்படுதுதவும். (மாற்கு 16:17-20 அப்4:29,30,33)

4. சுவிசேஷத்தின் சத்தத்திற்கு மக்களை வசப்படுத்தவும்
மத்தேயு 4:23,25

5. தேவனுக்கு மகிமையைக் கொண்டு வரவும் (மாற்கு 2:12; லூக்கா 13:13; 18:43;யோவான் 9:2-3)

கர்த்தர் யாருக்கு அவருடைய திட்டப்படி சுகமளிக்க விரும்புகிறாரோ அவனைச் சுகப்படுத்தும்படி பரிசுத்த ஆவியானவர், தேவனுடைய ஊழியக்காரனுக்கு, குணமாக்கும் வரங்களைக் கொடுக்கிறார். எலிசாவின் மூலம் தேவன் அனுப்பிய குணமாக்கும் வரத்தை, நாகமான் பெற்றுக் கொள்வதில் அவனுக்குப் பிரச்சனை இருந்தது. குணமளிப்பது அநேசமாக, விசுவாசத்தின் இரட்டைச் செயல்களை உடையதாக இருக்கிறது: பெறுவதற்கு விசுவாசமும், குணமாக்கும் வரத்தை அமுல்படுத்துவதற்கு விசுவாசமும் வேண்டும்.

## 11. அற்புதங்களை செய்யும் வரம்

1கொரி 12:10

தேவன், இயற்கையில்சாதாரண போக்கில் குறுக்கிடும் போது ஒரு அற்புதம் நிகழ்கிறது. அற்புதங்களைச் செய்யும் வரமானது தேவன், பரிசுத்த ஆவியின் வல்லமையை நமக்கு அளிக்கும்போது, முற்றிலும் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஒன்றைச் செய்யும்படி, நம்மைத் தகுதிப்படுத்துகிறது.அவர் குறிப்பிட்ட நேரத்தில், விசேஷித்த காரியங்களுக்காக இந்த வரத்தை நமக்குத் தருகிறார்.

ஆவியின் வரங்கள் யாவுமே அற்புதமானது தான், ஆனால் அற்புதம் என்கிற வார்த்தை இந்த இடத்தில் வல்லமையின் நடபடிகள் என உபயோகிக்கப் பட்டிருக்கிறது.

a) அற்புதங்கள், உயிர்த்தெழுதலுக்கு மறுக்க முடியாத சான்றுகள். இயேசு உயிரோடு இராவிட்டால், பிணியாளிகளை சொஸ்தமாக்கவும், அற்புதங்களைச் செய்யவும் அவருடைய நாமத்திற்கு வல்லமை இருந்திராது ( அப்போஸ்தலா 4:33)

b) இயேசுவின் நாமத்தினால் செய்யப்பட்ட அற்புதங்கள் கீழ்க்கண்டவற்றை நிறைவேற்றியது:

1. தைரியம் தந்தது. அது விசுவாசிகளுக்கு இயேசுவைப் பிரசங்கிக்க தைரியம் தந்தது. (அப்போஸ்தலர் 4:29,30) அவர்கள் அற்புதம் செய்யும் இயேசுவுடனே இருந்தவர்களென்று மக்கள் அறிந்து கொண்டார்கள் (அப்போஸ்தலர் 4:13)

2. ஜெபிக்கத் தூண்டியது. அது, விசுவாசிகளை தேவனோடு இன்னும் நெருங்கி ஜெபிக்கச் செய்தது. ( அப்போஸ்தலர் 4:29-31)

3.பாவத்தைக் குறித்து உணர்வடைந்தார்கள். மனிதர், அவர்களுடைய பாவங்களைக் குறித்து உணர்வடையவும், குத்தப்படவும் செய்தது. (அப்போஸ்தலர் 5:28,33) 4:4, 5:14)

4. ஐயாயிரம் பேர் மனந்திரும்பினார்கள். ஒரு அற்புதத்தினாலே ஐயாயிரம் பேர் ஒரு நாளில் மனந்திரும்பினார்கள் ( அப்போஸ்தலர் 4:4, 5:14)

GCI

5. தேவனை மகிமைப்படுத்தினார்கள். நடந்த சங்கதிகளைக் குறித்து எல்லாரும் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.
( அப்போஸ்தலர் 4:21)
6. சுவிசேஷம் பரவியது. அது சுவிசேஷம் வேகமாய்ப் பரவச் செய்தது. ( அப்போஸ்தலர் 5:14-16)

C. சீஷர்கள் பிரசங்கித்த, வியாதியஸ்த்ரை சுகமாக்கிய, பிசாசுகளைத் துரத்தின, அற்புதங்கள் செய்த இடங்களிளெல்லாம் திரளான ஜனங்கள் இயேசுவிடம் திரும்பினார்கள்.

1. சமாரியாவில், பிலிப்பு சமாரியாவில் செய்த அதிசயங்களைக் கண்டு, கேட்டு அவனுக்குச் செவி கொடுத்தார்கள் (அப்போஸ்தலர் 8:6)

2. லித்தாவிலும் சாரோனிலும், பேதுரு ஐனேயாவைப் பார்த்து, "இயேசு கிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார்; நீ எழுந்து, உன் படுக்கையை நீயே போட்டுக் கொள் என்றான். உடனே அவன் எழுந்திருந்தான்." லித்தாவிலும் சாரோனிலும் குடியிருந்தவர்களெல்லாரும் அவனைக் கண்டு கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்.

( அப்போஸ்தலர் 9:34-35)

3. யோப்பா பட்டணத்தில், யோப்பா பட்டணத்திலுள்ள அநேகர், பேதுரு தொற்காளை உயிரோடெழுப்பினதைக் கண்டு விசுவாசமுள்ளவர்களானார்கள்.

(அப்போஸ்தலர் 9:42)

4. லீஸ்திராவிலே, லீஸ்திராவின் ஜனங்கள், பவுல் சொன்ன வார்த்தையின் படி, சப்பாணி ஒருவன் குதித்தெழுந்து நடந்ததைக் கண்டு, தேவர்கள் மனுஷ

GCI

ரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கி வந்திருக்கிறார்கள் என எண்ணினார்கள்
( அப்போஸ்தலர் 14:8-18)

"அப்போஸ்தலருடய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது. திரளான புருஷர்களும், ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவாகளாகிக் கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச சேர்க்கப்பட்டார்கள்."

"பிணியாளிகளைப் படுக்கைகளின் மேலும், கட்டில்களின் மேலும் கிடத்தி, பேதுரு நடந்து போகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர் மேல் படும்படிக்கு, அவர்களை வெளியே வீதிகளில் கொண்டு வந்து வைத்தார்கள் "

"சுற்றுப்பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டு வந்தார்கள்; அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள்" ( அப்போஸ்தலர் 5:12-16)

5. அப்போஸ்தலருடைய நடபடிகள். அப்போஸ்தலருடைய நடபடிகள் அநேக அற்புதங்களோடு முடிவடைகிறது. (அப்போஸ்தலர் 28:8-9)

d. இந்த வரத்தின் நடைமுறைக் கிரியைகள்

1. பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டு, விசேஷித்த நம்பிக்கையையும, அதிகாரத்தையும் பெறுதல்.

2. விசுவாச வார்த்தையும், அதிகாரமும். அக்கினியால் பதில்

GCI

கொடுக்கிற தேவன் தான், இஸ்ரவேலின் கர்த்தர் என்று எலியா கூறினான். அப்பொழுது இறங்கின அக்கினி அற்புதங்களைச் செய்யும் வரத்திற்கு ஒரு உதாரணம் ( பார்க்க. I இராஜாக்கள் 18:21–39)

3. ஒரு துணிவான விசுவாசச் செயல்

## IV.செயல்பாட்டு வரங்கள்

### A. தீர்க்கதரிசன வரம்

ரோமர் 12:6.9

"நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர் களானபடியினாலே நம்மில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற வார்த்தையுடையவன் விசுவாசப்பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன்."

"உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து நன்மையைப் பற்றிக் கொண்டிருங்கள்."

1. புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசியைக் குறித்த புதிய ஏற்பாட்டு உதாரணம்:
சீமோன் பேதுரு (அப்போஸ்தலர் 1–10 அதிகாரங்கள் மற்றும் I & II நிருபங்களையும் வாசித்துப் பாருங்கள்)

2. செயல்பாட்டு தீர்க்கதரிசன வரம் பெற்ற நபரின் குணாதிசயங்கள்:

a) அவர் வார்த்தைகளால் விவரிக்க கூடியவர்
b) அவர் தைரியமும், வெளிப்படையானவராகவும் திகழ்கிறார். அது அவரை பொது நபராக மாற்றுகிறது.
c) அவரது வார்த்தைகளை நியமிக்க வேத வாக்கியங்களை அதிகமாய் உபயோகிக்கிறார்.

GCI

d) மற்றவர்களின் தீயகுணத்தையும் நோக்கத்தையும் பகுத்து உணரும் திறன் உடையவர் ( அப்போஸ்தலர் 5 அனனியா, சப்பீராள் குறித்த பேதுருவின் செயல்பாடு)

e) மற்றவர்களின் சுய சித்தத்தை உடைக்கும்படியான தீராத தாகம் உடையவர்.

f) தான் அறிவித்துள்ள சத்தியத்தை கேட்டவர்கள் ஏற்றுக் கொண்டதை வெளிப்படையாகக் காண்பிக்க வேண்டுமென வலியுறுத்துபவர்; "மனந்திரும்பி ஞானஸ்தானம் பெறுங்கள்" என்பது போன்ற அழைப்பு.

g) ஒரு தீர்க்கதரிசி மற்றவர்களுடைய விமர்சனங்களை முழுமையாக பெரிதுபடுத்துவது இல்லை.

3. எல்லாத் தீர்க்கதரிசன வரம் பெற்றவர்களுக்கும் இருக்கக்கூடிய பொதுவான அபாயம்:

"அவர் உறவுரீதியாக செயல்படுபவராக இருப்பதை விட தனது ஸ்தானத்தை முன்னிறுத்தி செயல்படவே விரும்புகிறார்."

4. இந்த அபாயத்துக்குச் சரியான பதில்:

"உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக"ரோமர் 12:9

குறிப்பு:

தீர்க்கதரிசன வரத்தை செயல்பாட்டு வரமாகப் பெற்றிருப்பவர். தனது அதீத தைரியம், வெளிப்படையைச் சரியாகக் கட்டுப்படுத்தாமலும், கிறிஸ்துவின் அன்புக்கு

முக்கியத்துவமளிக்காமல் இருப்பாரானால் அவர் நன்மைக்குப் பதிலாக அதிக தீமை செய்கிறவராய் இருப்பார். ஆனால் சுவிசேஷத்தை அன்புடன் அறிவித்து, தன் உணர்ச்சியைச் சீராக்கும் போது, அவர் தீமைக்கு விரோதமாகவும் நன்மைக்காகவும் தேவனால் பயன்படுத்தப்படும் மிகவும் வல்லமையான ஆயுதமாக விளங்குவார்.

## B. சேவையின் வரம்

GCI

ரோமர் 12:6,7,9

“நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர் களானபடியினாலே நம்மில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற வார்த்தையுடையவன் விசுவாசப்பிரமாணத்துக்கேற்றதாகச்சொல்லக்கடவன்.”
“ஊழியஞ் செய்கிறவன் ஊழியத்திலும் போதிக்கிறவன் போதிக்கிறதிலும்”
உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து நன்மையைப் பற்றிக் கொண்டிருங்கள்.”

வேதத்தில் ஊழியம் செய்தல் என்னும் பதத்தின் கிரேக்க வார்த்தை “டையக்கோனேட்” – யிலிருந்து டீகன் என்னும் வார்த்தை வருகிறது. சில கிறிஸ்தவ ஊழியர்களுக்கு இந்தப் பதவி கொடுக்கப்பட்டுள்ளது.

சேவை வரமானது மற்றவர்களுடைய சரீர, நடைமுறை தேவைகளைச் சந்திக்கும் வகையில் செயல்படுகிறது. மற்றொரு வகையில் இரக்கஞ் செய்யும் வரம் மற்றவர்களின் மனரீதியான மற்றும் உணர்ச்சி ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்வதில் செயல்படுகுறது. ஆனால் அதிக அளவிலான கிறிஸ்தவர்கள் சேவை வரமோ அல்லது இரக்கஞ் செய்யும் வரமோ உடையவர்களாய் இருப்பர். ஏனெனில் இவை இரண்டும் மிக அவசியமானவை.

1. சேவை வரத்தின் புதிய ஏற்பாட்டு உதாரணங்கள்

அப்போஸ்தலர் 6ல் தேர்ந்தெடுக்கப்பட்ட 7 ஊழியர்கள் (ஸ்தேவான் மற்றும் பிலிப்பு போன்றவர்கள்) உதவி செய்யும் ஊழியருக்கு 3 அடிப்படை குணாதிசயங்கள் இருக்க வேண்டுமென ஆதித் திருச்சபை எதிர்பார்த்தது.

a) நற்சாட்சி
b) பரிசுத்தாவி மற்றும் ஞானத்தால் நிரப்பப்பட்டவர்
c) சேவை வரம் குறித்த சில அறிவுரைகளை லூக்கா 10 ஆம்

GCI

அதிகாரத்தில் மார்த்தாளுடனான உரையாடல் மூலமாக இயேசுவின் அறிவுரைகளைக் காண முடிகிறது.

2. சேவை வரமுடையவரின் குணாதிசயங்கள்

a) சபையின், மற்றவர்களின் நடைமுறைத் தேவைகளைச் சந்திக்க வேண்டும் என்னும் தீராத தாகம்.

b) மற்றவர்களுடைய தேவையைக் குறித்த நல்ல அறிவு உடையவர். மற்றவர்களால் அறியக்கூடாத தேவைகளையும் அறியக்கூடியவர்.

c) சேவை வரமுடையவர் 'இல்லை' என்று சொல்ல இயலாதவர் விசேஷமாக தேவைகளைப் பார்க்கும் போது, எல்லா வகை யிலும் உதவி செய்ய வேண்டுமென விரும்பி தன்னை வருத்திக் கொள்பவர்.

d) சில வேளைகளில் மக்களுடைய நடைமுறைத் தேவைகளைச் சந்திப்பதில் அவர்களுடைய ஆவிக்குரிய தேவைகளை நிறைவேற்றத் தவறுகின்றனர்.

e) இவர் மற்றவர்களும் தன்னைப் போலவே சேவை செய்வில் அர்ப்பணிப்பும் ஆர்வமும் உள்ளவர்களாய் இருக்க வேண்டும் என விரும்புகிறார். லூக்கா 10ஐ கவனியுங்கள். இதனால் மற்றவர்கள் இவரை வலுக்கட்டாயமாகக் கருத்துக்களைத் திணிப்பவர் என நினைக்கின்றனர்.

f) பொதுவாகவே உடனடியாக செய்ய வேண்டிய வேலை அவரை ஆக்கிரமித்து விடுவதால் அதையே இறுதி வழிவமாகக் கண்டு, தனது முன்னுரிமைகளில் அதிகக் குழப்பமடைகிறார். மார்த்தாளுக்கும் இதுவே சம்பவித்தது.

g) இவருடைய மிக வித்தியாசமான குணநலன்களில் ஒன்று, ஒரு செயலை உடனடியாகச் செய்து முடித்து (மார்த்தாள் மற்றும் பிலிப்புவைப் போல) அடுத்த செயலைச் செய்யக்

GCI

கடந்து போவது. ஒரு வேளை இதுவே பிரதான வேற்றுமைக் குணநலனாய் இருக்கலாம். சேவை செய்பவர் உடனடி இலக்குகளையே நினைத்துக் கொண்டிருக்கும் வேளையில், நிர்வாகியோ தனக்கு முன் இருக்கும் முழுமையான நோக்கத்தைக் கண்டு நீண்ட கால இலக்கு நிறைவேற வேண்டும் என்ற கவனமுடன்செயல்படகிறார்.

h) இவ்வாறு உடனடி இலக்குகளைத் துரிதமாக நிறைவேற்ற விரும்புபவர், மற்றவர்களின் கீழ் இருந்து செயல்படுவது அதிகக் கடினம். அப்படிப்பட்ட கவுரவமான சிவப்புக் கம்பள மதிப்பை வெறுத்து அந்த வேளையையும் உதறித் தள்ளிவிட என்ன முயற்சி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்வார்.

i) சேவை செய்பவர்கள் நல்ல உடல் திறம் படைத்தவர்கள். மற்றவர்கள் சற்று ஓய்வெடுத்துக் கொள்ள நிறுத்தினாலும் இவரால் தொடர்ந்து செல்ல முடியும். மார்த்தாள் இந்த வகைக்கு நல்ல உதாரணம்

j) அதிக தியாகம் செய்பவர்கள். இவர்கள் மற்ற எந்தக் கிறிஸ்தவர்களையும் விட அதிக தியாகம் செய்வர். குறிப்பிட்ட செயலைச் செய்ய செலவிடப்பட வேண்டிய நேரம் மற்றும் பணத்தைப் பெரிதாக எண்ணுவதில்லை.

k) சில வேளைகளில் இந்த வரம் சிலருக்குப் பெரும் சொத்தாக அமையாமல் இவரது தியாகம் தவறுதலாக மாற வாய்ப்பு உள் ளது. இவர்கள் மற்றவர்களும் தங்களைப் போலவே தியாகம் செய்யவில்லை என்று அடுத்தவர்களை நியாயந்தீர்க்க விளை வர். (மரியாளைக் குறித்த மார்த்தாளின் அபிப்பிராயத்தைக் க வனிக்கவும்) மற்றவர்களுக்காகவும் சபையின் தேவைகளுக்காகவுமே அவர் தொடர்ந்து ஓடிக் கொண்டே இருப்பதால் அவரது குடும்பத் தேவைகளை சந்திக்கத் தவறுவதால் அவரது குடும்பத்தினர் தங்கள் உரிமைகள் மறுக்கப்பட்டது போல உணர்கின்றனர்.

GCI

3.சேவை வரமுடையவர்கள் சந்திக்கும் பொதுவான அபாயங்கள்

a) மக்களை மையப்படுத்துவதைவிட வேலையை மையப்படுத்தியே செயல்படுபவர்
b) குறிப்பிட்ட செயலைச் செய்யும்படியாக எந்த உறவையும் குறைத்து மதிப்பிடத் தயங்க மாட்டார்.

இந்த அபாயங்களுக்குத் தேவன் அளிக்கும் பதில்கள்.

a) இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் ஊழியக்காரனின் இருதயமுடையவனாய் இருக்க வேண்டும் என்று மேல் வீட்டறையில் சீஷர்களுடன் போதித்தார். மக்களுக்கான இருதயம் ஏனெனில் முடிவு ஒருமைப்பாட்டில் (சரியான உறவில்) அமைய வேண்டும், ஒரு வேலையில் அல்ல.
b) ஆகவே முதற்சபை இவர்களுக்கென 3 எதிர்பார்ப்புகளை முன் வைத்தது. "நற்பெயர், பரிசுத்தாவியின் நிறைவு மற்றும் ஞானம், ஏனெனில் வேதம் சொல்லும் ஞானம் என்பது தேவனுடைய வரங்களைச் சரியாக உபயோகப்படுத்துவது எப்படி என்பதைஅர்த்தங்கெள்கிறது."
c) எனவே பவுல் ஒவ்வொரு ஊழியருக்கும் அளிக்கும் போதனை:
"சகோதர சிநேகத்தோடே ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்.கனம் பண்ணுவதில் ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள்."

ரோமர் 12:10

குறிப்பு: தேவன் தமது இருதயத்தைப் போலவே ஒரு ஊழியக்காரனுடைய இருதயமுள்ளவனாய் இருக்கும்படியாகவே தமது பரிசுத்த ஆவியை அனுப்புகிறார். பெற்றுக் கொள்வதை விட கொடுக்கும் இருதயம்

GCI

மெய்யான சகோதர பட்சமுள்ள இருதயம். சரியான காரணங்களுக்காக, தேவனோடும் மற்ற மக்களோடும் ஒரு மனப்பாட்டை வளர்க்கும் காரணத்துக்காக, ஊக்கமளிக்கும் இருதயம்

C. போதனை வரம் ரோமர் 12:6,7,11

"நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களான படியினாலே நம்மில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற வார்த்தையுடையவன் விசுவாசப் பிரமாணத்துக்கேற்றதாகச்சொல்லக்கடவன்."

"ஊழியஞ் செய்கிறவன் ஊழியத்திலும் போதிக்கிறவன் போதிக்கிறதிலும்"

"அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ் செய்யுங்கள்"

1. போதிக்கும் வரம் பற்றிய புதிய ஏற்பாட்டு உதாரணம்
அப்போஸ்தலனாகிய மத்தேயு

2. போதிக்கும் வரமுடையவரின் குணாதிசயங்கள்:

a) அவர் எப்போதும் தனது கருத்துக்களைக் கிரமமாக எடுத்துச் சொல்கிறார். இதுவே மிகவும் பிரதானமான நேர்த்தியான குணாதிசயமாக போதிக்கும் வரமுடையவரில் காணலாம்.
b) சூழ்நிலைக்கேற்ற ஒற்றுமையான கருத்துக்களை வலியுறுத்துபவர். மற்றவர்கள் தங்கள் போதனை அல்லது பிரசங்கத்தில் சூழ்நிலைக்கு மாறுபட்ட கருத்துக்களை எடுத்துச் சொல்லும் போது மிகவும் வேதனை அடைவார்.
c) கருத்துக்களை வாசிப்பவர் எளிதாகப் புரிந்து கொள்ளவும் மனனம் செய்யவும் கூடிய வகையில் ஒழுங்குபடுத்துபவர். நல்ல உதாரணங்கள் மலைபிரசங்கத்தில் உள்ள பாக்கியவான்கள் மற்றும் மத்தேயு 23ல் காணப்படும் "7ஐயோக்கள்"
d) வார்த்தைகள் கவனமாய் உபயோகப்படுத்தப்பட வேண்டும் என

GCI

விரும்புகிறவர். சரியான வார்த்தைகளை உபயோகிப்பது என்பது போதக வரமுடையவர்களுக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் காணப்படுகிறது.

e) கிறிஸ்தவத்தில் மற்ற அனைத்துக் காரியத்துக்கும் அடிப்படையாகப் போதகம் விளங்குகிறது என்று உண்மையாகவே விசுவாசிக்கிறவர் மற்ற எந்த சுவிசேஷ எழுத்தாளர்களை விட, தனது சத்தியங்களை நிரூபணம் செய்யும் அநேக வேத வாக்கியங்களை மேற்கோள் காட்டுகிறார். இதுவும் போதகனின் மற்றுமொரு விசேஷித்த குணாதிசயம்.

f) ஏற்கனவே நிறுவப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட சத்தியங்களுடன் புதிய சத்தியங்களை இணைத்துக் கொள்ளும் வகையில் அதிக சிரத்தை எடுத்துக் கொள்பவர்.

g) நடைமுறை விவாதங்களை விட கோட்பாடு சார்ந்த கருத்துக்களையே அதிகம் எடுத்துரைப்பவர். இதற்குக் காரணம் குறிப்பிட்ட சத்தியத்தின் கோட்பாட்டில் அதிக ஈடுபாடு காட்டுவதில், அவைகளின் நமைுறை வழிமுறைகளைக் காணத் தவறி விடுகிறார்.

h) எல்லாச் சத்தியங்களையும் ஆராய விரும்புகிறவர். தனது சத்தியங்களை எடுத்துரைப்பதை விட, இன்னும் அதிகமாக ஆராய்ச்சி செய்வதையே இந்த நடைமுறை வரம் பெற்றவர் விரும்புவார். சத்தியத்தைத் “தோண்டி எடுக்க” அதிக ஆர்வம் காட்டுவார்.

i) குறிப்பிட்ட சத்தியத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்பாக அதன் அதிகாரத்தை அறிய விளைவார். நீங்கள் ஒரு புதிய காரியத்தை அறிவிப்பீர்களானால் அவர் உடனடியாகப் பதிலளிக்கும் விதம், “உங்கள் கருத்துக்கு என்ன ஆதாரம் உள்ளது?” என்பதே, இப்படிப்பட்ட சுபாவம் மற்றவர்கள் போதகரை மந்தமானவராகவும் சட்டவாதியாகவும் காண வழிவகுக்கிறது.

j) தனது படிப்பறிவைக் குறித்துப் பெருமைப்படுகிறார். ஏனெனில் இவர் தொடர்ந்து தன் அறிவைப் பெருக்க முயற்சி செய்கிறார்.

k) இறுதியாக போதகர் சில வேளைகளில் பரிசுத்த ஆவியின்

GCI

வார்த்தைகளைப்பெரிதுபடுத்தாமல், வேத வியாக்கியானங்களில் தனது அறிவையே சார்ந்து கொள்ளும் சோதனைக்குள்ளாகிறார்.

**3. போதனை வரமுடையவர்களுக்கு வரும் பொதுவான அபாயங்கள்**

a) ஜனங்களை மையப்படுத்தாமல், உபகரணத்தை மையப்படுத்தி விடுகிறார்.

b) தனது தத்துவக் கருத்துக்களை உறவின் பதலீட்டாக மாற்றும் சூழலுக்குத் தள்ளப்படுகிறார்.

**4. தேவனுடைய பதில்கள்**

"அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ் செய்யுங்கள்" ரோமர் 12:11.

குறிப்பு: ஆவியில் அனலாய் அதாவது பரிசுத்தாவியின் ஜீவனை உணரும் வகையில் போதனை வரம் பெற்றவர் இல்லாதிருக்கும் பட்சத்தில், அவரது ஆராய்ச்சிமற்றும் போதனையில் மற்ற எல்லாவற்றைப் பார்க்கிலும் தனது பாடத்திட்டமே அதிமுக்கியத்துவம் வாய்ந்தது என மார்தட்டும் சோதனைக்கு உட்படுகிறார்.

## D. எச்சரிக்கும் வரம்

ரோமர் 12:6,8,12

"நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களான படியினாலே நம்மில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற வார்த்தையுடையவன் விசுவாசப் பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன்."

"புத்தி சொல்லுகிறவன் புத்தி சொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்து

GCI

கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ் செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக் கடவன்."

"நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள். உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள், ஜெபத்தில் நிலைத்திருங்கள். "

கிறிஸ்தவ எச்சரிப்பாளர் விசுவாசத்தில் வளரும்படியாகவும், வளர வேண்டிய விதத்தையும் மிக அழுத்தமாக வலியுறுத்துவார். கிறிஸ்தவ அடிப்படையில் எச்சரிப்பு என்பது தினசரி நடைமுறை வாழ்வில் கிறிஸ்தவ சத்தியங்களை செயல்படுத்துவது ஆகும். எச்சரிப்பவர் கிறிஸ்தவக் கோட்பாடுகள் நமது வாழ்வில் எவ்விதம் நடைமுறைப்படுத்துவது என்பதை விளக்குபவர். வாழ்க் கையின் உண்மையாக செயல்படுத்தக்கூடியதாக கிறிஸ்தவக் கோட்பாடுகளை உருவாக்குவது எப்படி என்பதை மற்றவர்களுக்கு எடுத்துரைக்கிறார்.

1. எச்சரிப்பின் வரம் குறித்த புதிய ஏற்பாட்டு உதாரணம்: அப்போஸதலன் பவுல்

2. எச்சரிப்பின் வரம் உடையவரின் குணநலன்கள்

a) எல்லாவற்றிற்கும் மேலாக, அவர் நடைமுறையாய் இருப்பவர், கிறிஸ்தவம் தத்துவமாகவோ, மதமாகவோ இராமல் நடை முறை வாழ்வாக இருக்க வேண்டும் என வலியுறுத்துகிறார். நடைமுறை விளக்கங்கள் இல்லாமல் செய்யப்படும் போதனை அல்லது பிரசங்கத்தைக் குறித்து அதிக வேதனை அடைகிறார். பவுல் சொல்கிறார். "தேவனுடைய ராஜ்யம் பேச்சில் அல்ல, பெலத்தில் உண்டாயிருக்கிறது."

1கொரிந்தியர்4:20

b) அவரது பெலன தேவ கிருபையில் உள்ளது. எச்சரிப்பாளர் தொடர்ந்து பயன்படுத்தும் கருப்பொருள்: "மனிதனால்

GCI

கூடாதது தேவனாலே கூடும்" எனவே அவர் சட்டத்தின் வாழ்வை வெறுப்பவராகவும் கிருபையின் வாழ்வை ஊக்கப்படுத்துபவராகவும் திகழ்கிறார்.

c) புத்தி சொல்பவர் கஷ்டங்களையும், பாடுகளையும் கிருபையில் வளர உதவும் வாய்ப்பாகக் காண்கிறவர். மேலும் மற்றவர்கள் இதைக் காணாததின் காரணம் என்ன என ஆச்சரியப்படுகிறார் இதனால் மற்றவர்கள் இவரைக் கடினமானவராகவும், மந்தமானவராகவும் நினைக்க நேரிடுகிறது.

d) புத்தி சொல்பவர் பாவம் மனித வாழ்வில் ஏற்படுத்தும் குழப்பங்களையும் பாவம் மனித வாழ்வில் செய்த விளைவுகளைக் காண்பதோடு நிறுத்திக் கொள்ளாமல், அதே மனிதனைத் தமது பரிசுத்தமாக்கும் அன்பினாலே பூரணப்படுத்த தேவனால் கூடும் என்பதை வார்த்தைகளாலும், செயல்களாலும் விவரிக்கக் கூடியவராய்த் திகழ்கிறார்.

e) எச்சரிப்பாளர் தன்னைக் கேட்பவர்களை அறிந்து வைத்திருக் கிறார். அவர்கள் தன் செய்தியை அங்கீகரித்து ஏற்றுக் கொ ள்ள வேண்டும் என வாஞ்சிக்கிறார். ஒரு தீர்க்கதரிசி பொதுவ ாகத் தனது செய்தியைக் கேட்பவர்களை அறிவதில்லை. ஆனால் புத்தி சொல்பவர் தம்மைக் கேட்பவர்கள் எவ்வாறு செய்திக்குப் பதிலளிக்கிறார்கள் என்பதைக் காண ஆர்வம் உடையவராய் இருக்கிறார்.

f) குறிப்பிட்ட பிரச்சனைகள் அல்லது பலவீனங்களை மேற் கொள்ள விசேஷித்த தீர்வுகளையும் சிறப்புத் திட்டங்களையும் கொடுப்பதை வழிமுறையாகக் கை கொள்கிறார். இப்படித் தான் அவர் பிரசங்கிக்கவும் போதிக்கவும் ஆலோசனை தரவும் செய்கிறார். அவர் பிரச்சனைகளைச் சொல்லி. பின்னர் "இங்கே தேவனுடைய பதில்களை காண்போம்: 1,2,3" என்கிறார்.

GCI

g) புத்தி சொல்பவர் தன்னைக் கேட்பவர் கவனிக்கும் வரைக்கும் விடா முயற்சியுடன் இருப்பவர். அவர்களுடைய ஆர்வம் குறையும் போது இவரும் அவர்கள் மீது ஆர்வம் குறைந்தவராய் வேறொருவரிடம் செல்கிறார்.

3.இந்த வரமுடையவர்களுக்கு இருக்கும் சில அபாயங்கள்

நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள். உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள், ஜெபத்தில் நிலைத்திருங்கள். ரோமர் 12:12

இதைச் செய்யும்படியாகவே தேவன் அப்போஸ்தலன் பவுல் அரேபியாவில் இருக்கும் போது வெளிப்படுத்தினார். இதையே ரோமப் பட்டணத்து சபையாரும் செய்யவேண்டும் என்று ரோமர் 12ல் எச்சரித்துப் புத்தி சொல்கிறார்.

குறிப்பு: தம்மைக் கவனிக்கிறவர் அறிவுரையை ஏற்றுக் கொள்ளாவிடில், புத்தி சொல்பவர் வேறொரு நபரிடம் செல்வது இயல்பான ஒன்று. ஆனால் பவுல் சொல்வது என்னவெனில்: உங்கள் நம்பிக்கையை இழந்து விடாதீர்கள், உங்கள் தோல்வியிலும் பொறுமையாய் இருங்கள். மேலும் உங்கள் வழிமுறைகள், திட்டங்கள் மற்றும் பரிகாரங்களின் மீது நம்பிக்கை வையாமல், தொடர்ச்சியான ஜெபத்தில் தேவன் மீது நம்பிக்கையாய் இருங்கள்.

## E. <u>கொடுக்கும் வரம்</u>

ரோமர் 12:6,8,13

"நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களான படியினாலே நம்மில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற வார்த்தையுடையவன் விசுவாசப் பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன்."

GCI

"புத்தி சொல்லுகிறவன் புத்தி சொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்;' இரக்கஞ் செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்."

"பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவிசெய்யுங்கள்; அந்நியரை உபசரிக்க நாடுங்கள் "

எல்லாக் கிறிஸ்தவர்களும் உண்மையான உக்கிரானக்காரர்களாக, நேர, தாலந்து மற்றும் பண உபயோகங்களில் கர்த்தருக்கு முதலிடம் தர அழைக்கப்பட்டுள்ளனர். ஆகவே தசமபாகம் செலுத்துவதன் அவசியத்தை வேதம் போதிக்கிறது. மீதமானவைகளைக் கொடுப்பது அல்ல. ஆனால் இது எல்லாருக்கும் உள்ள கடமையாய் இருப்பினும், கிறிஸ்துவின் சரீரத்தில் கொடுக்கிறவர்களாக செயல்படுகிறவர்கள் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே அவர்கள் கொடுக்கிற ஆவிக்குரிய செயல்பாட்டு வரமுடையவர்களாய்த் திகழ்கின்றனர்.

1. கொடுக்கும் வரத்தின் புதிய ஏற்பாட்டு உதாரணம்: பர்னபா
அப்போஸ்தலர் 4 அதிகாரத்தில் முதலாவதாக பர்னபா சொல்லப்பட்டுள்ளார். அவரது பெயர் யோசேப்பு. அப்போஸ்தலர் அவரை எபிரெய மொழியில் ஆறுதலின் மகன் என்று அர்த்தங்கொள்ளும் பர்னபா என அழைத்தனர். கொடுக்கும் வரம் பெற்ற ஒரு நபருக்கு ஏற்ற மிகப் பொருத்தமான பெயர்.

2. இந்த வரமுடையவரின் குணாதிசயங்கள்.

a) கொடுப்பவர் பணம் சம்பாதிக்கவும் சொத்துக்களைப் பெருக்கவும் கூடிய திறன் படைத்தவர். ஒரு செயலைச் செய்ய நம்மைப் பெலப்படுத்தாமல் எந்த ஒரு செயலையும் செய்ய அனுமதிக்க மாட்டார். பர்னபா நில உரிமையாளராக இருந்தார். அதைப்போலவேஅனனியாவும் வசதி

GCI

படைத்தவனாய் இருந்தான். ஆனால் அதை துஷ்பிரயோகம் செய்து விட்டார்.

b) கொடுப்பவர் மற்றவர்களின் ஊழியத்தைத் தாங்குவதைத் தமது அழைப்பாகவும், ஊழியமாகவும் கருதுகிறார். இதன் அர்த்தம் என்னவெனில் அவர் மற்றவர்களையும் அவர்களின் ஊழியத்தையும் நம்ப வேண்டும்.

c) கொடுக்கிறவர் தன்னால் தாங்கப்படும் ஊழியத்தில் பங்கு வகிக்க விரும்புகிறார். விளைவாக அவரது முதலீடு வீண் போகாது என்னும் நம்பிக்கையைப் பெறும் வகையில் அவரது செயல்பாடு, மற்றவர்கள் இவர் ஊழியத்தில் ஆதிக்கம் செலுத்துவதைப் போல நினைப்பர். நல்ல தொழில் முனைவருக்கே உரிய வகையில் அவர் யோசிப்பது தவறு என்று சொல்வதற்கில்லை.

d) மற்ற மக்கள் சொல்லும் ஊழியத்தின் தன்மையைப் பகுத்து ணரும் திறன் உடையவர். பவுல் மற்றும் மாற்குவின் ஊழியங்களைக் குறித்த பகுத்தறிவுடையவராய் பர்னபா திகழ்ந்தார்.

e) கொடுக்க வேண்டும் என்று நிர்பந்தித்தால் அதை அவர் ஏற்றுக் கொள்ள மாட்டார். இப்படிப்பட்ட நிர்பந்தம் மற்றும் வேண்டுகோளை மறுக்கும் பட்சத்தில் மற்றவர்கள் இவரை சுயநலவாதி என்று நினைக்கத் தோன்றும். அதே வேளையில் உண்மையாகவே அவர் மற்ற கிறிஸ்தவர்களை விட தாராளமாகக் கொடுக்க கூடியவர்

f) கொடுக்கிறவர் தனது காணிக்கையின் மூலம் குறிப்பிட்ட வகையில் மற்றவர்களையும் கொடுக்க ஊக்கமளிக்கிறார். தனது இடத்தை ஆதித்திருச்சபைக்கு பர்னபா கொடுக்க முன் வந்ததன் மூலமாக இதையே செய்தார்.

g) கொடுக்கிறவர் பொதுவாகவே விளம்பரத்தை விரும்பாமல், அமைதியாகக் கொடுக்க விரும்புகிறார். அவருக்குப் புகழ்ச்சி

GCI

தேவைப்படுவதில்லை. ஏனெனில் பணம் சம்பாதிக்கவும், தொழிலில் முன்னேறவும் தேவையான திறமை அவருக்கு இருக்கிறது. அப்போஸ்தலர் 14ல் பர்னபா அப்போஸ்தலன் பவுலுடன் இணைந்து பேசப்பட்டாலும், பர்னபா இரண்டாம் நிலையில் இருந்து கொண்டு, பவுல் சகல புகழ்ச்சியையும் பெறும்படி விட்டு விட்டார்.

h) பணத்தை மற்றவர்கள் விரயம் செய்யும்போது கொடுக்கிறவர் வருத்தமடைகிறார். ஏனெனில் பணம் எவ்வாறு உபயோகப் படுத்தப்படும் என்பதை முன்னறிகிறவராய் இருக்கிறார்.

i) கொடுக்கிறவர் அநேக அழைப்புகளையும், தேவையைக் குறித்த அநேக வேண்டுகோளையும் கேட்கும்போது, கொடுக்க வாய்ப்பு கொடுக்கும் போது பொதுவாக வரக்கூடிய சோதனை வேண்டாம் என்று சொல்வதே ஆகும்.

3. இந்த வரத்தை உடையவர்களுக்கு வரும் அபாயங்கள்

மக்கள் மையமாக இராமல் ஊழிய/ சேவை மையமாக மாறுவது.

குறிப்பிட்ட காரியத்தை மையப்படுத்தி மக்களை மறந்து விடுவது என்னும் அபாயம்.

4. இந்த அபாயத்தைக் குறித்த தேவனுடைய பதில்கள்

“பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவிசெய்யுங்கள் அந்நியரை உபசரிக்க நாடுங்கள்.” ரோமர் 12:13

ஒரு வகையில் பார்ப்போமானால் பர்னபா இல்லாமல் புதிய ஏற்பாட்டில் நாம் வாசிக்கும் எந்த ஊழியமும் நடைபெற்றிருக்காது.

i. பர்னபா முதல் திருச்சபை மற்றும் பேதுருவின் ஊழியத்தின்

GCI

**அமைப்புக்கு முன் வடிவம் கொடுத்தார்.**

ii. **சேவை செய்யும் ஊழியத்தில் 7 ஊழியர்கள் ஏற்படுத்துவதில் உபகரணமாகச் செயல்பட்டார்.**

iii. **பாலஸ்தீனத்திற்கு அப்பால் அந்தியோகிய சபையை துவங்கக் காரணமாய் இருந்தார்.**

iv. **கிறிஸ்தவ சபையில் அங்கமாக பவுல் ஏற்றுக் கொள்ளப்படக் காரணமானவர்.**

v. **பவுலின் முதல் மிஷனரிப் பயணம்**

vi. **மாற்குவின் இரட்சிப்புக்குக் காரணமானவன் இதனிமித்தம், முதலாவது சுவிசேஷம் எழுதப்படுவதிலும், இவர் பங்கு இருந்தது. மாற்கு சுவிசேஷமே மத்தேயு மற்றும் லூக்கா சுவிசேஷங்களுக்கு அடித்தளமாக அமைந்தது. இவை யாவற்றிலும் பர்னபா முக்கிய பங்கு வகித்தார்.**

**குறிப்பு: கொடுக்கும் வரமில்லாமல், ஊழியஞ் செய்வது கடினமாகி விடும்; ஏனெனில் பொருளாதார உதவி முக்கியப் பங்கு வகிக்கிறது.**

## F. <u>நிர்வாக வரம்</u>

**ரோமர் 12:6,8,14**

**"நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களான படியினாலே நம்மில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற வார்த்தையுடையவன் விசுவாசப் பிரமாணத்துக்கேற்றதாகச்சொல்லக்கடவன்."**

**"புத்தி சொல்லுகிறவன் புத்தி சொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ் செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக் கடவன்."**

GCI

"உங்களை துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள். ஆசீர்வதிக்க வேண்டியதேயன்றி சபியாதிருங்கள்"

நிர்வகிக்கும் வரம் வேதாகம மொழிபெயர்ப்புகள் பலவும் விதவிதமான சொல் தொடரைப் பயன்படுத்தி உள்ளனர். "உதவி செய்பவர்", "ஆளுகை செய்பவர்" "நிர்வாக வரம் பெற்றவர்", "அமைப்பாளர்", "அதிகாரத்தில் இருப்பவர்", "தலைமை தாங்குபவர்" மற்றும் "வழி நடத்துபவர்" ஆகியவை உபயோகப் படுத்தப்பட்டுள்ளன. இதில் நிர்வாகி என்னும் சொல் இந்த வரத்தின் முழுமையான குணாதிசயத்தையும் விளக்குகிறது.

1. இந்த வரம் உடையவர்களின் புதிய ஏற்பாட்டு உதாரணம்:
இயேசுவின் சகோதரரான யாக்கோபு முதல் கிறிஸ்தவ சபையின் அறியப்பட்ட தலைவராகத் திகழ்ந்தவர். நீரோவின் உபத்திரவத்திற்குப் பின் மாற்கு சுவிசேஷத்தை எழுதிய யோவான் மாற்கு திறமையான சபைத் தலைவராகத் திகழ்ந்தார்.

2. நிர்வாகியின் குணநலன்கள்

a) முதன் முதலாக அவர் ஒரு செயல்படும் மனிதர். பிரதான இலக்கை அடையும் வரை செயல்படுபவர். இதன் விளைவாக மாற்கு சுவிசேஷம் செயல்பாட்டு புத்தகமாய் விளங்கியது. இப்புத்தகத்தின் மிக முக்கிய குணாதிசயம் "உடனே" என்னும் பதம் யாக்கோபு நிருபத்தின் கருப்பொருளும் செயல்பாடு தான். "வார்த்தையைக் கேட்கிறவர்களாயிராமல் செயல்படுகிறவர்களாயிருங்கள்". செயல்வீரர்கள் மற்றவர்களுடன் இடைபடுவதும், சிலருக்கு மேற்பட்டுச் செய்வதும் தவிர்க்க முடியாதது. எனவே ஒரு தீர்க்கதரிசியை விட நிர்வாகியே அதிக எதிரிகளைச் சம்பாதிக்கிறார்.

b) நிர்வாகிக்கு உடனே என்னும் பதம் எவ்வளவு முக்கியத்துவம்

GCI

வாய்ந்ததோ, அதேப் போல அதிகாரம் என்னும் வார்த்தையும் முக்கியமானது. ஒரு நிர்வாகி மிகவும் அதிகாரமுடையவர். யாக்கோபு மற்ற மக்கள் என்ன செய்யவேண்டுமென்று ஒன்றன் பின் ஒன்றாக சட்டதிட்டங்களை கொடுக்கிறார். இயேசுவின் அதிகாரத்தை மாற்கு சுவிசேஷத்தைப் போல மற்ற சுவிசேஷங்கள் வலியுறுத்தவில்லை. ஒரு நிர்வாகி தனக்கு கீழயிருக்கிறவர்களை சரியாக நிர்வாகிக்க வேண்டுமானால் அவர்கள் யாவரும் அவருடைய ஆளுகைக்கு கீழ்ப்பட்டிருக்க வேண்டும்.

c) ஏற்கனவே அமைப்பு ரீதியான தலைமைத்துவம் இல்லாவிடில், நிர்வாகி தானே முன்வந்து பொறுப்பேற்று தலைமை தாங்குகிறார். ஆதிதிருச்சபையில் யாக்கோபு செய்ததைப் போலவே நீரோவின் உபத்திரவத்திற்கு பின் மாற்கு செய்தது போலவும் நிர்வாகி செயல்படுகிறார்.

d) பொறுப்புக்களை பகிர்ந்து கொடுக்கவும், அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கவும் தேவையான திறன் படைத்தவராகவும் திகழ்கிறார். இதன் மூலம் யாக்கோபு மிஷனரி ஊழிய பொறுப்பை பேதுருவிடமும், பவுலிடமும் பகிர்ந்து கொடுத்தார். மேலும் அன்றைய உலகம் முழுவதும் கிறிஸ்தவ சபை பரவியது.

e) ஒரு நிர்வாகி முழுமையான சித்திரத்தை காணவும், நீண்ட கால இலக்குகளை தெளிவுபடுத்தவும் கூடிய திறன் பெற்றவர்

f) நிர்வாகி தன் பொறுப்பில் இருக்கிறவைகளை ஒழுங்குபடுத்துவதில் தேறியவர். ஆகவே தான் முதலாவது திருச்சபையை அமைக்க யாக்கோபும் ரோமாபுரியிலிருந்த கிறிஸ்தவர்களை ஒருங்கிணைக்க மாற்கும் தெரிந்து கொள்ளப்பட்டனர். இவர்கள் சிதறிப் போயிருந்த கிறிஸ்தவர்கள் குழப்பம் மற்றும் ஒழுங்கற்ற வழிகளில் இருந்து விலகி நிலையான அமைப்பாகும்படி வலியுறுத்தினர்.

GCI

g) மற்ற எந்த வரங்களை உடையவர்களை காட்டிலும் நிர்வாகி அதிக அளவில் விமர்சிக்கப்படுகிறார். ( இன்றைக்கும் சபைகளில் நடக்கும் காரியம் இதுவே: நிர்வாக ரீதியான தீர்மானங்களே அதிக குழப்பங்களை ஏற்படுத்துகின்றன.)

h) நிர்வாகி ஒரு குறிப்பிட்ட செயலை எவ்வளவு சீக்கிரத்தில் முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் முடித்து அடுத்த வேலையைச் செய்ய முயல்கிறார். அதன் காரணமாகத்தான் மாற்கு சுவிசேஷம் சிறிய சுவிசேஷமாக அமைந்தது. மற்ற எழுத்தாளர்களைப் போல விவரங்களில் நேரம் செலவிட வில்லை. யாக்கோபும் இவ்வாறே எழுதுகிறார்.

i) குறிப்பிட்ட செயலைச் செய்து முடிக்கத் தேவையான தனிப்பட்ட ஆதாரங்களைப் பகுத்தறிந்து வைத்திருக்கிறார். ஆகவே தேவன் மற்ற மக்களைப் பகுத்துணரும் விசேஷ ஆவிக்குரிய வரத்தை நிர்வாகிக்குத் தந்து பக்திவிருத்தியடையச் செய்கிறார்.

j) நிர்வாக அமைதலாக அமர்ந்து மற்றவர்கள் குறிப்பிட்ட செயலை அல்லது பிரச்சனையைப் பேசுவதைக் கூர்ந்து கவனித்து, பின்பு சரியாகப் பிரச்சனையின் மையத்திற்குச் சென்று பரிகாரங்களை நேரடியாக முன் வைக்கிறார். முதலாவது கிறிஸ்தவக் கூட்டமைப்பில் கிறிஸ்தவர்களின் விருத்தசேதனம் குறித்த பிரச்சனைக்கு இந்த விதத்தில் தான் யாக்கோபு தீர்வு கொடுத்தார்.

k) நிர்வாகம் தன்னால் ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டதிட்டங்களுடன் ஒட்டிக்கொள்கிறார். யாக்கோபு நிருபத்தை வாசியுங்கள். அவர் ஒவ்வொரு சட்டமாகச் சொல்ல அவைகளைச் சரியாக கடைபிடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். கலாத்தியர் 2ல் பவுல் யாக்கோபை விமர்சித்து, இதன் காரணமாகவே பேதுருவும் மாய்மாலம் செய்கிறார் என்று சாடுகிறார்.

GCI

l) இறுதியாக, நிர்வாக அநேக அழுத்தங்களுக்கு மத்தியில் சிறந்த முறையில் செயல்படுகிறார். ஆதித் திருச்சபையில் யூத அதிகாரிகளிடமிருந்து உபத்திரவம், விசுவாசிகளுக் கிடையே பிரிவினை மற்றும் கருத்து வேற்றுமை ஆகிய பிரச்சனைகளுக்கு மத்தியில் தலைமைத்துவத்தின் முழு உருவத்தையும் காண்பித்துப் பதிலளிக்கும் யாக்கோபைப் பாருங்கள். மாற்கும் இதைப் போலவே உபத்திரவங்களுக்கு மத்தியில் பிரச்சனைகள் சுமுகமாகக் கையாண்டு சபையை நிர்வகித்தார். சகிக்கவே முடியாத அழுத்தத்திற்கு மத்தியில் தான் மாற்கு சுவிசேஷத்தை அவர் எழுதினார்.

3. இந்த வரங்களுடையவர்களுடைய பொதுவான அபாயம்.

அவர் மக்கள் மையமாய் இராமல் செயல்–மையமாக இருக்க விழைகிறார்.

இவர் செயல்வீரராக இருப்பதால் அவரது பிரதான உந்துதல் காரியங்களை நடப்பிப்பதிலேயே இருக்கிறது. இதைச் செய்யும் போது அவர் மற்றவர்களுடன் உரசக்கூடிய நிலை ஏற்படுகிறது. ஆகவே அவர் இந்த சோதனையில் அகப்பட வாய்ப்பு அதிகம்.

நிர்வாகி தனக்கு விரோதமாகச் செயல்படுகிறவர்களை உடனடியாக எதிர்க்கும் சோதனை அவருக்கு வந்தாலும், தேவனுடைய வழி நடத்துதல் மற்றும் சித்தப்படியே செயல்படவேண்டும்.

4. இந்த அபாயத்துக்கு தேவனின் பதில்

உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள். ஆசீர்வதிக்க வேண்டியதேயன்றி ஒருவரையும் சபிக்காதீர்கள். ரோமர் 13:14

மற்ற மக்கள் உங்கள் வாழ்க்கையை ஆதிக்கம் செய்ய விடாமல்,

GCI

தேவனுடைய முழுமையான ஆளுகைக்கும் அதிகாரத்துக்கும் உட்பட்டு இருங்கள்.

குறிப்பு: ஒரு எதிரியை எதிரியாய்ப் பார்ப்பதின் மூலம் அவரை நண்பராக மாற்ற முடியாது. அவரை நண்பராக மாற்றும் ஒரே வழி அந்த எதிரியை நண்பனாகப் பாருங்கள்.

## G. இரக்கஞ் செய்யும் வரம்

ரோமர் 12:6,8,15

"நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களான படியினாலே நம்மில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற வார்த்தையுடையவன் விசுவாசப் பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன்."

"புத்தி சொல்லுகிறவன் புத்தி சொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்;
பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்;
முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்;'
இரக்கஞ் செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்."

"சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள்; அழுகிறவர்களுடனே அழுங்கள்"

கிறிஸ்தவர்கள் மத்தியில் நடைமுறை ரீதியாக அதிகமாய் செயல்படும் இரு வரங்கள் சேவை மற்றும் இரக்கஞ் செய்தல் ஆகியவைகளே காரணம். அவை மிக அதிகத் தேவையுள்ளவை.

இதை வாசிக்கும் 3ல் ஒரு பகுதியைச் சார்ந்தோர் சேவை வரத்தையும் மற்றொரு 3ல் ஒரு பகுதியினர் இரக்கஞ் செய்யும் வரமும் உடையவர்கள்.

GCI

**1.இந்த வரம் உடையவரின் புதிய ஏற்பாட்டு உதாரணம்: லூக்கா**

**2. இரக்கம் செய்யும் வரம் உடையவரின் குணாதிசயங்கள்**

a) **முதலாவதாக அவர் மற்றவர்களுடைய உணர்ச்சிகளயையும், தன் சொந்த உணர்ச்சிகளையும், நன்றாக புரிந்து வைத்துள்ளார். பிறருடைய உணர்ச்சிகளைத் தன் சொந்த உணர்ச்சியைப் போல பாவிக்கிறவர். அதே வேளையில் அவருடைய உணர்ச்சிகளும், இலகுவாக புண்படுவதால் மற்றவ்ர்கள் அவரை வருத்தப்படுத்தக் கூடாது என்னும் பயத்துடன் வெளிப்படையாக நடந்து கொள்ள தவறுவர்.**

**இந்த அதீத உணர்ச்சி இரக்கம் செய்யும் வரத்தை உடையவருக்கு இயல்பாகவே அழகை பாராட்டும் தன்மை வந்து விடுகிறது. லூக்கா சுவிசேஷம் உலகிலேயே மிக அழகான புத்தகம் என வருணக்கப்படுகிறது. சேவை செய்பவர் குறிப்பிட்ட செயலை செய்யும்படி கட்டாயப்படுத்தும் நிலையைக் குறித்து பொருட்படுத்துவதில்லை. ஆனால் இரக்கம் செய்யும் வரமுடையவருக்கோ அது மிகவும் வித்தியாசமான சுபாவமாயிருக்கிறது.**

b) **மக்களில் ஆர்வம் கொண்டவர் ஜனங்கள் மீது இயல்பாகவே உள்ளான அன்பு உடையவர். தீர்க்கதரிசியும், மக்களை நேசிப்பவராக இருந்தாலும், அவர் கூட்டத்தையே மனதில் கொண்டுள்ளார். ஆனால் இரக்கம் செய்யும் வரமுடையவரோ தனி நபர் உறவை அதிகமாக முக்கியப்படுத்துகிறார். லூக்கா அப்போஸ்தலர் நடபடிகளில் 110 தனிநபர்களை குறித்தும் அவர்களுடைய விவரங்களை குறித்தும் ஒவ்வொரு பக்கத்திலும், விலக்கியுள்ளார்.**

c) **ஜனங்களின் ஆபத்துகளில் உடன் இருப்பவர் லூக்கா மட்டுமே இயேசு கிறிஸ்து ஏழைகள் மற்றும் தள்ளப்பட்டவர்களை தேவைகளைக் குறித்து முகரிசனை உடையவராய் இருந்தார் என்பதை,**

GCI

ஐசுவரியவான் லாசரு உவமைகளும், இளையகுமாரன், நல்ல சமாரியன் போன்ற பல உவமைகளின் வாயிலாக விளக்கியுள்ளார்.

d) இவர் மற்ற ஊழியங்களை காட்டிலும் குணமாக்குதலின் ஊழியத்தை வலியுறுத்துகிறார். மேலும் ஜெபத்தை அதிகமாக முக்கியப்படுத்துகிறார். லூக்கா மற்ற எந்த புதிய ஏற்பாட்டு புத்தகங்களை காட்டிலும் பரிசுத்த ஆவியானவரைக் குறித்து சுவிசேஷத்திலும், நடபடிகள் புஸ்தகத்திலும், எழுதியுள்ளார்.

e) குணமாக்குதலில் அவருக்கு இருக்கும் ஆர்வம் சரீரபிரகாரமான சுகத்தில் மட்டுமல்லாமல் உள்ளான மனதின் தேவைகள் மற்றும் மற்றவர்களுடைய வேதனையிலிருந்து பெற வேண்டிய சுகத்தையும், விரும்புகிறார். இதுவும் சேவை செய்பவரிடமிருந்து வேறுபட்ட குணாதிசயமாய் இருக்கிறது. நல்ல சமாரியன் காயம் கட்டுவதோடு நிறுத்திக் கொள்ளாமல் அவனுக்கு தேவையான ஓய்வு மற்றும் பூரண சுகத்தையும் விரும்பினான்.

f) மற்றவர்களுடைய காயங்களை ஆற்றும்படி மேற்கொள்ளும் அவரது முயற்சியில் சரியாக தீர்மானிக்கக்கூடாது நபராக மாற்றுகிறது. அவர் சபையின் உண்மையான எந்த தலைமைத்துவத்தையும் எடுத்து கொள்வதற்கு முன்பான தன் சுய தப்பிதங்களை திருத்திக் கொள்ள வேண்டும்.

g) தள்ளப்பட்டவர்களுக்கும், ஏழை எளியோருக்கும் அவர் காண்பிக்கும் அக்கறை, வசதியான நபர்களுடைய உள்ளான தேவை மற்றும் காயங்களை பொருட்படுத்தாத தன்மை உடையவராய் இருக்கிறார். நீங்கள் லூக்கா சுவிசேஷத்தையும், நடபடிகள் புத்தகத்தையும் மட்டுமே வாசிக்க நேர்ந்தால் ஏழ்மை ஒரு வரமல்ல என்று புரிந்து கொள்வீர்கள். தள்ளப்பட்டவர்களுக்காக காண்பிக்கும் கரிசனை குடும்பத்தில் குழப்பங்களை ஏற்படுத்துகிறது.

h) இந்த வரமுடையவர் எல்லா கிறிஸ்தவர்களிடமும் சமமாக பழகுகிறவர் லூக்கா தொடர்ந்து சுவிசேஷத்தின் உலகளாவிய தன்மையை

GCI

வலியுறுத்துகிறார். லூக்காவுக்கு இனம், பாலினம் மற்றும் நாடு எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்துவதில்லை.

i) இந்த வரத்தை பெற்றிருக்கும் நபர் மற்றவர்களோடு பேசும் போது கனிவையும், அன்பையும் வெளிப்படுத்துகிறவராக காணப்படுகிறார். லூக்கா சுவிசேஷத்தில் தலைகளில் கை வைக்கிறதைக் குறித்து மற்ற புதிய ஏற்பாட்டு புத்தகங்களில் சொல்லப்பட்டிருப்பதைவிட அதிகமாக வலியுறுத்துகிறார். அப்படிப்பட்ட நெருக்கம் சில வேளைகளில் தவறான புரிந்து கொள்ளுதலையோ, பொறாமையையோ ஏற்படுத்துகிறது.

j) இந்த வரத்தை உடையவர் மற்றவருடைய வேதனையில் விருப்பம் உள்ளவராய் இருப்பதால் மற்ற பணிகளில் பின் தங்கி விடுகிறார். ஆகவே சரியான கட்டுப்பாடு இருந்தால் மட்டுமே இதை தவிர்க்க முடியும்.

k) இந்த வரத்தை உடையவர் மிகவும் தியாகமுள்ள நபர். சேவை செய்பவரை போலவே இல்லை என்று சொல்வது அவருக்கு கடினமான ஒன்றாக தோன்றும். ஆனால் சேவை செய்பவர் குறிப்பிட்ட வேலையை செய்யும்படியாக தியாகம் செய்கிறார். இரக்கம் செய்யும் வரமுடையவரோ மற்றவர்களுடைய வேதனைகளையும், பாடுகளையும் நீக்கும்படியாகவே தியாகம் செய்கிறார்.

3. இந்த வரத்தை உடையவர்கள் சந்திக்கும் பொதுவான அபாயம்.

இவர் அதிகமாக உணர்ச்சியை மையப்படுத்துபவராகவே காணப்படுகிறார். சீரிய சிந்தையை மையப்படுத்துவதில்லை. இதன் விளைவாக உணர்ச்சிகளை மையப்படுத்தியே வாழ சோதிக்கப்படுகிறார். தன் வாழ்வை உணர்ச்சிகளுக்கும், சீரிய சிந்தைக்கும் மத்தியில் சமநிலைப்படுத்துவதில்லை. இந்த அபாயத்திற்கு தேவனுடைய பதில்கள்:

GCI

"சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள்;
அழுகிறவர்களுடனே அழுங்கள்"

ரோமர் 12:15

சந்தோஷத்திற்கும், துக்கத்திற்கும், வெற்றிக்கும், தோல்விக்கும் மற்றும் வசதிக்கும், ஏழ்மைக்கும் இடையே சமநிலையான வாழ்வை ஏற்படுத்துவதுஅவசியம்.

குறிப்பு:
இரக்கம் செய்யும் வரத்தை உடைய நபர் சந்தோஷமான இருதயம் மற்றும் துக்கமான உணர்வுகளுக்கிடையில் சமநிலையைக் காக்க வேண்டும். தவறினால் சுய பரிதாபத்திற்கு உட்பட நேரிடும். கிறிஸ்தவன் நற்செய்தியை சுமந்து செல்பவன். மேலும் நமது உணர்ச்சிகளும் ஆவியும் அந்த நற்செய்தியை பிரதிபலிக்க வேண்டும்.

<u>முடிவுரை:–</u>

A) நமது ஆவிக்குரிய வரங்களை/ஊழியங்களை கண்டறிய உதவும் திறவுகோல்கள்

1. நமது வரங்களுக்காக ஆர்வமுடன் தேவனை தேட வேண்டும்.

"அன்பை நாடுங்கள்; ஞானவரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்;"

1 கொரிந்தியர்:14:1

a) மத்தேயு 7:7 கேட்க துாண்டுகிறார்.
நாம் பெற்றுக் கொள்ளாததின் முக்கிய காரணம் நாம் கேட்காததே.

GCI

யாக்கோபு 4:2-3

"நீங்கள் இச்சித்தும் உங்களுக்குக் கிடைக்கவில்லை; நீங்கள் கொலை செய்தும், பொறாமையுள்ளவர்களாயிருந்தும், அடையக் கூடாமற் போகிறீர்கள். நீங்கள் சண்டையும், யுத்தமும் பண்ணியும், நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை."

"நீங்கள் விண்ப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால் பெற்றுக் கொள்ளாமலிருக்கிறீர்கள்."

நாம் சந்தேகம் இல்லாமல் விசுவாசத்தோடு கேட்க வேண்டும்.

யாக்கோபு 1:6-7

"ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்."

"அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக."

இந்த கேட்குதல். தேடுதல், தட்டுதல் (மத்தேயு 7:7-8) விடா முயற்சியை குறிக்கிறது.  நாம் நிறுத்திக் கொள்ளாமல் தொடர்ந்து பரலோகத்தின் கதவுகளை கேட்கவும், தேடவும், தட்டவும் வேண்டும்.

B) உங்கள் வரங்களை வளர்க்க உதவும் திறவுகோல்கள்

2 கொரிந்தியர் 8:7, 2 தீமோத்தேயு 1:6,7

1. உங்கள் வரங்களில்/ஊழியங்களில் சிறக்க நாடுங்கள்.  தேவன் நமது

வரங்களில் வளரவும் அவைகளில் சிறப்பாக செயல்படவும் வேண்டும் என விரும்புகிறார். 2 கொரிந்தியர் 8:7

மற்றெல்லாக் காரியங்களிலும், நீங்கள் பெருகியிருக்கிறது போல

சிறப்பான செயல்பாடு என்பது, ஒரே இரவில் வருவதில்லை. அதை நாட வேண்டம். அதை வளர்க்க வேண்டும்.

2 தீமோத்தேயு 1:6 இதனிமித்தமாக நான் உன் மேல் என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவ வரத்தை நீ அனல்மூட்டி எழுப்பி விடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன்.

ஒரு வேளை தீமோத்தேயு தன் வரத்தை பயன்படுத்தவதற்கு பயம் தடையாக இருந்திருக்கலாம். ஆகவே 2 தீமோத்தேயு 1:7 அவனுக்கு கொடுக்கப்பட்டது. அநேக கிறிஸ்தவர்கள் தங்கள் வரங்களையும், தங்கள் திறமைகளையும் பயன்படுத்த தடையாக இருப்பது பயமே ஆகும்.

சிறப்பான செயல்பாட்டின் முதல்படி தனது வரங்களை உபயோகப்படுத்துவது ஆகும். தானாகவே எல்லாம் நடக்க வேண்டும் என்று நினைப்பது மேன்மைக்கு வழிவகுக்காது.

2. வரங்களை வளர்க்கும் இரண்டாவது படி திருத்தங்களை ஏற்றுக் கொள்வது.

நீதிமொழிகள் 12:1

"புத்திமதிகளை விரும்புகிறவன் அறிவை விரும்புகிறான்; கடிந்து கொள்ளுதலை வெறுக்கிறவனோ மிருககுணமுள்ளவன்."

நீதிமொழிகள் 29:1

"அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றிச் சடிதியில் நாசமடைவான்."

நீதிமொழிகள் 1:5

"புத்திமான் இவைகளைக் கேட்டு, அறிவில் தேறுவான்; விவேகி நல்லாலோசனைகளை அடைந்து;

3. மற்றவர்களின் வெற்றியிலிருந்து கற்றுக் கொள்வது மூன்றாவது வழியாகும்.

GCI

நீதிமொழிகள் 27:17

"இரும்பை இரும்பு கருக்கிடும்; அப்படியே மனுஷனும் தன் சிநேகிதனுடைய முகத்தைக் கருக்கிடுகிறான்."

4. நமது வரங்களை வளர்க்கும் நான்காவது விதம்.

மற்றவர்களுடைய தவறுதலிலிருந்து கற்றுக் கொள்வது

"புத்திமான் இவைகளைக் கேட்டு, அறிவில் தேறுவான்; விவேகி நல்லாலோசனைகளை அடைந்து; நீதிமொழிகள் 1:5

5. ஐந்தாவது திறவுகோல் நமது சொந்த தவறுகள் நம்மை தடுத்துவிட அனுமதியாதிருத்தல்

"சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை. ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி,"

பிலிப்பியர் 3:13

6. ஆறாவது திறவுகோல் விடா முயற்சி

"கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்."

பிலிப்பியர் 3:14

b) மத்தேயு 7:9-11

"உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானோ?"

"மீனைக் கேட்டால் அவனுக்கு பாம்பைக் கொடுப்பானோ?"

"ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக்கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?"

GCI

தேவன் வரங்களை கொடுக்க ஆவலாக இருக்கிறார் என்பதை உறுதிபடுத்துகிறார்.

வசனம் 9: அப்பத்திற்கு பதில் கல்லா?

வசனம் 10: மீனுக்கு பதில் பாம்பா?

வசனம் 11: இயல்பாகவே தீமையான மனிதன் நல்ல பரிசுகளை கொடுக்க அறிந்திருக்கும் போது, பரமபிதா தம்மை நோக்கி வேண்டுபவர்களுக்கு நல்ல ஈவுகளை கொடுக்காதிருப்பது எப்படி?

2. இயன்ற விதத்தில் கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்

மத்தேயு 25:16,17

இரண்டு தாலந்துகளையும், ஐந்து தாலந்துகளையும் பெற்றுக் கொண்டவர்கள் அவைகளை பயன்படுத்தி கடினமாக உழைத்து தங்கள் திறனை கண்டடைந்தார்கள்.

எபேசியர் 5:15-16

வசனம் :15 ஆன படியினாலே நீங்கள் ஞானமற்றவர்களைப் போலக் கவனமாய் நடந்து கொள்ளப் பார்த்து,

வசனம் :16 நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்.

GCI

List of References：

1.Wilson, W.Cameron, Shepherds of Romania
(Virginia, USA, 1994)

2. Shepherd Staff (Burbank, USA, World Map, 1993)

3. “Gifts of the Holy Spirit by Trinity Christian Centre”, Singapore